விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 12 சனிக்கிழமை (25.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

## குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

(கரவெட்டி)

ஆவரங்கால் பகுதியில் மர்மமான முறைகளில் உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தரின் சடலம் கடையொன்றிற்கு முன்னால் காணப்பட்ட நிலையில் மக்கள் அதனை கண்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் ஆவரங்கால் சந்தியிலுள்ள

20 ஆம் பக்கம் பார்க்க..

## கிணற்றினுள் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் நீரில் மூழ்கி மூச்சுத்திணறி பரிதபாகரமான உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று வேலணை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச சேர்ந்த எஸ்.கோபிசன் (வயது 5) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

சடலமானது நேற்று மாலை 4.30 மணியளவல பிரேதப் பரிசோ

20 ஆம் பக்கம் பார்க்க..

## கயிற்றில் சிக்குண்ட சிறுமி உயிரிழப்பு

(கிளிநொச்சி)

நுளம்பு வலைக்கு கட்டுப்பட்டிருந்த கயிறு கழுத்தை இறுக்கியதால் 12 வயது சிறுமியொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த சுரேந்திரன் கீர்த்தனா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மேற்படி பகுதியிலுள்ள குறித்த சிறுமி நேற்று முன்தினம் கட்டிலின் மேல் நுளம்பு வலைக்கு கட்டப்பட்டிருந்த கயிற்றோடு விளையாடிக் கொண்டிருந்த வேளையில் கயிறு

20 ஆம் பக்கம் பார்க்க..

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில்

# ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் - நிமல்கா



(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல்போகும் சம்பவங்கள் குறித்து இம்முறை ஜெனிவா மனித உரிமை கூட்டத்தில் தகவல்களை முன்வைக்க உள்ளதாக வர்க்கவாதம் மற்றும் இனவாதத்திற்கு எதிரான சர்வதேச அமைப்பின் செயற்பாட்டாளர் நிமல்கா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க..

## ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளிக்க மாட்டேன் - தமரா

(நியூயோர்க்)

ஜெனிவாவில் எதிர்வரும மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை ஆணைக குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் குரல் கொடுக்க போவதில்லை என ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.



அத்துடன் ஜெனிவா மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கையின் பிரதிநிதியாக தான் கலந்து கொள்ளவுள்ளதாக வெளியான செய்திகளில் எந்த உண்மையுமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதிநிதி பதவியை தனக்கு மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்தாலும், அதனை தான் ஏற்றுக்கொள்ள போவதில்லை என

19 ஆம் பக்கம் பார்க்க..

# உணர்வுபூர்வமாக நடந்தேறிய ஓம் நமசிவாய பிரார்த்தனை பவனி

## யாழ்.மண்ணில் ஆன்மீக எழுச்சி



(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாடடில் ஓம் நமசிவாய பிரார்த்தனை பவனி நேற்று உணர்வுபூர்வமாக நடந்தேறியது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனைப் பவனி வணணார்பண்ணை சிவன் ஆலயத்தில் இருந்து நேற்று மதியம் ஆரம்பமாகியது.

ஓம்நமசிவாய பிரார்த்தனை பவனியில் அந்தணச்

19 ஆம் பக்கம் பார்க்க..



ஆடுநனைகிறது ஓநாய் அழுகின்றது!

செய்திகள் பக்கம் 11



ஆஸி பயிற்சியாளராக வோண் நியமனம்

விளையாட்டு பக்கம் 18



ஜெனிவா சென்று சாட்சியமளிப்பேன்

செய்திகள் பக்கம் 03

கருணாவை பிரித்தது நாமே! - ஐ.தே.க.

செய்திகள் பக்கம் 05



இந்து மதத்திற்கு நடக்கும் நிந்தனை - சபா.வாசுதேவக்குருக்கள்

பக்கம் 04

வடக்கு முதல்வரின் கருத்தை நீதியரசரின் தீர்ப்பாக எடுக்க வேண்டும்

ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

# மிரட்டலுக்கு உள்ளான நபர் மர்மமான முறையில் உயிரிழப்பு

## பண்ணைக் கடலில் சடலம் மிதந்தது

(யாழ்ப்பாணம்)

மர்மான முறையில் உயிரிழந்துகிடந்த இளம் குடும்பஸ்தரொருவரின் சடலம் யாழ்ப்பாணம் பண்ணைக் கடலில் இருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கொலையாக இருக்கலாம் எனவும் பொலிஸாரினால் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தையுமான குலசிங்கம் அருள்மதன் (வயது 30) எனும் இளம் குடும்பஸ்தரே கடலில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தர் ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்தவரென்றும், வண்ணார்பண்ணை ஏ.பி.லேனில் தற்காலிகமாக இருந்து வயறிங் வேலை

20 ஆம் பக்கம் பார்க்க.

# இந்திய - இலங்கை மீனவர்கள் 130 பேர் நேற்று விடுதலை

(கொழும்பு)

இந்திய - இலங்கை கடல் எல்லையை மீறிய நிலையில் கைது செய்யப்பட்ட இரு நாட்டு மீனவர்களில் 130 பேர் நேற்று காலை விடுதலை செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையின பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த 59 இலங்கை மீனவர்கள். அவர்களின் 4 படகுகள் மற்றும் 71 இந்திய மீனவர்கள், அவர்களின் 15 படகுகள் என்பவை பரிமாறப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவரகள் சகலரும் விடுதலை செய்யப்பட்டால், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவரகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என மீன்பிடி அமைசசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 27 ஆம் திகதி இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

இந்திய மீனவர்

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# றெக்ஷியனின் சகோதரியின் முறைப்பாட்டை பதிய நடவடிக்கை

சுட்டுக் கொல்லப்பட்ட நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் டானியல் றெக்ஷியனின் சகோதரியான றெஜீனாவின் முறைப்பாட்டை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி நாரந்தனை மத்தியில் உள்ள றெஜீனாவின் வீட்டின் மீது நள்ளிரவு 12 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் கல்வீசித் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் தொலைபேசி மூலமாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய போது அங்கு வந்த பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்தினை பார்வையிட்டு கல்லெறிந்தவர்கள் யார் என தெரியாமல் முறைப்பாடு பதிவு செய்யமுடியாது எனக் கூறியிருந்தனர்.

இதுதொடர்பில்ஊடகவியலாளர்களினால்கேட்கப்பட்டபோதே றெஜீனாவின் முறைப்பாட்டை பதிவு செய்வதற்கான நடவடிக்கையினைமேற்கொள்வதாக அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் முறைப்பாட்டை பதிவு செய்யும் உரிமையினை மறுக்கும் உரிமை யாருக்கும் இல்லையென அவர் தெரிவித்தார். (செ-4)

# கரைதுறைப்பற்று பிரதேச சபை-முல்லைத்தீவு பொது அறிவித்தல்-2014

**1. வியாபார அனுமதிப் பத்திரம் - 2014**

எமது பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2014-ம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தினை பெறுவதற்கான விண்ணப்பத்தினை 2014-ம் ஆண்டு ஜனவரி 31-ம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி முல்லைத்தீவு, முள்ளியவளை, செம்மலை, கொக்கிளாய், முள்ளிவாய்க்கால் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2014.02.28 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**2. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபைத் தலைவரின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை அல்லது தொழிலை நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கான உரிமம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமைப்பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2014ஆம் ஆண்டு மேற்குறிப்பட்ட வர்த்தமானியில் உள்ள தொழில்களை நடாத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் முல்லைத்தீவு, முள்ளியவளை, செம்மலை, கொக்கிளாய, முள்ளிவாய்க்கால் உப அலுவலகங்களில் பார்வையிடமுடியும்.

**3. படவரைஞராக பதிவு செய்தல்**

2014ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்ய விரும்புவோரும் ஏற்கேனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்து கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**4. வீடமைப்பு நகர சீர்திருத்த சட்டம் பிரிவு 268இன் பிரகாரமான அறிவித்தல்**

4.1 கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள, மதில், மலசலகூடங்கள், குழாய்கிணறுகள் என்பவற்றை நிர்மாணித்தல், புதுப்பித்தல் வேலைகளை மேற்கொண்டால் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியத்தருகின்றேன். எனவே கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படாத கட்டடங்கள் யாவும அகற்றப்படும் போது எதுவித நட்டஈடும் சபையினால் வழங்கப்படமாட்டாது.

4.2 ஏற்கெனவே அனுமதி பெற்று ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியினைப் புதுப்பித்தல் வேண்டும்.

4.3 அனுமதி பெற்றுக் கட்டடம் அமைத்தவர்கள் முடிவுறுத்தப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**5. துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்**

2014ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமத்தினை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

**6. வீதி ஒழுங்கை பேணுதல்**

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வீதி சட்ட ஒழுங்கை பேணுமாறும் வீதியோரங்களில் பூமரங்களை நாட்டி அழகுபடுத்துவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**7. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப் பிரதேச சபையின் நிர்வாகப் பரப்பிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் வர்த்தக நிலையங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் காட்சிப்படுத்தும் விளம்பரங்களை 2014.01.31ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தை செலுத்தி சபையின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/ நிறுவனங்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**8. கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்**

எமது பிரதேச எல்லைக்குள் கட்டாக்காலிகளாக உள்ள கால்நடைகளினால் வீதிவிபத்துக்கள் இடம்பெறுவதுடன் பொதுமக்களுக்கும் பல அசௌகரியங்களும் உயிர் ஆபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே குறிப்பாக சனநடமாட்டமுள்ள வீதிகள் பொது இடங்களில் கட்டாக்காலிகளாக திரியும் கால்நடைகள் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 66 இன் பிரகாரம் பிரதேசசபையினால் பிடிக்கப்பட்டு பிரதேசசபையினால் தாபிக்கப்பட்ட பட்டியில் அடைக்கப்படும் இந்த கால்நடையினை உரிமை கோரும் கால்நடை உரிமையாளர்கள் 03 நாட்களிற்குள் குறித்த தண்டப்பணத்தினை செலுத்தி கால்நடைகளை மீட்கத் தவறும் பட்சத்தில் உரிமை கோரப்படாத கால்நடைகளினை பொலிசாரிடம் ஒப்படைத்து நீதிமன்றில் பாரப்படுத்தப்படும்.

**9. பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கு அண்மித்த பகுதியில் கடலுணவுகள், இறைச்சி, மரக்கறி விற்பனையை தடைசெய்தல்**

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக் கடைகள் அமைந்துள்ள பகுதியில் 01கிலோமீற்றர் வரையான சுற்றாடலில் கடலுணவுகள், இறைச்சி வகைகள், மரக்கறிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ/வீதியோரங்களிலோ விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். இவை தொடர்பான மேலதிக விபரங்களை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் எமது சபை அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சு.ரவீந்திரநாதன்
செயலாளர்.

(ரி-6321)

கரைதுறைப்பற்று பிரதேச சபை
முல்லைத்தீவு.

# கைப்பையை திருடிய நபர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் பகல் வேளையில் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் கையும் மெய்யுமாக நேற்று பிடிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் பார்வையாளர் நேரத்தின் போது வைத்திய சாலை வெளிவாயிலில் நோயாளர்களைப் பார்ப்பதற்காக காத்திருந்த பெண் ஒருவரின் கைப்பையை அபகரித்த போதே இத்திருடன்அங்கு நின்றவர்களால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டதுடன்,

உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரினால் குறித்த நபரிடம் இருந்து கைப்பையும் கைப்பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் கேட்டபோது,

பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட நபரினால் முறைப்பாடு செயயப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபரிடம்தற்போது பொலிஸ்நிலையத்தில் விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. இன்றைய தினம் குறித்த நபர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த நபர் பல தடவைகள் வைத்தியசாலையில் திருட்டில் ஈடுபட்டு பிடிபட்டுள்ளார் என்றும் வைத்திய சாலை பாதுகாப்பு ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (செ-11)

# மன்னார் மனித புதைகுழி; சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

(மன்னார் )

மன்னார் திருக்கேதீஸ்வரம மனித புதைகுழி தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் குழுவொன்று நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி பகுதிக்குச் சென்று முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

முதற்கட்டமாக குறித்த பகுதிக்கு பொறுப்பான கிராம அலுவலகர் மற்றும் அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் ஆகியோரிடம் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் முன்னிலையில் 13 ஆவது தடவையாக நேற்று குறித்த மனித புதைகுழி தோண்டும் பணிகள் இடம் பெற்றன.

இதன் போது அவ்விடத்திற்கு சென்ற குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று குறித்த புதைகுழி தோண்டப்பட்ட போதும் எது வித மனித எச்சங்களும் மீட்கப்படவில்லை.

எனினும் அடையாளப்படுத்தப்பட்ட சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டு இது வரை 10 பெட்டிகளில் அடைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெட்டிகளில் அடைக்கப்படும் மனித எச்சங்களைப் பாதுகாப்பான இடத்தில் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது வரை 44 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இன்று சனிக்கிழமை மன்னார் நீதவான் முன்னிலையில் புதைகுழி தோண்டும் பணிகள் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

நிரந்தர வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் Tea, Paint, Tin, Plastic bag, கோழியிறைச்சி, Battery, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18 - 48 வரையான ஆண், பெண் இருபாலாருக்கும் உணவு, தங்குமிட வசதியுடன் நிரந்தர வேலைவாய்ப்பு.

(5421)

தொடர்புகளுக்கு : 0766975069

வடமராட்சியில்

மகளிருக்கான பயிற்சிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பம்



ஜனவரி 27 திங்கள்



கேக் ஐசிங், மணப்பெண் ஒப்பனை, தலைமுடி தொடர்பான பயிற்சி ஃபேஷியல், உடையமைத்தல், துணிகளில் வர்ணமிடல்.

பயிற்சி முடிவில் தகமைச் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தூரிகை நுண்கலை வளாகம்
ம.ம.வி.வீதி, நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தமிழ்த்தொண்டு!

ஒரு காலத்திலே மதுரையில் ஒரு வக்கீல் இருந்தார்.

ஸ்காட்துரை என்று பெயர்... ஆங்கிலேய இந்தியர். அவர் தன்னுடைய தொழிலிலே எப்படி இருந்தாரோ தெரியாது... ஆனால்... தமிழிலே அரைகுறை! எதையும் ஏறுக்கு மாறாக செய்வது இவருடைய இயல்பு!

இவர் என்ன செய்தார் தெரியுமா?

புதிதாக திருக்குறள் புத்தகம் ஒன்றை அச்சிட்டு வெளியிட்டார்.

உள்ளது உள்ளபடி வெளியிட்டால் பரவாயில்லை...! அல்லது உரை எழுதிவெளியிட்டாலும் பரவாயில்லை...! இவர் அப்படி செய்யவில்லை...

திருக்குறளையே திருத்தி எழுத ஆரம்பித்துவிட்டார். எதுகை மோனை சரியில்லாத இடங்களையெல்லாம் திருத்தப்போகிறேன் என்று ஆரம்பித்தார். அப்படி திருத்தி அதை நல்ல தாளிலே அச்சிட்டு வெளியிட்டார்.

அந்தப் புத்தகத்தின் தலைப்பிலே எப்படி போட்டிருந்தார் தெரியுமா?

"சுகாத்தியாரால் திருத்தியும் புதுக்கியும்
பதிப்பிக்கப்பட்ட குறள்" அப்படி போட்டிருந்தார்.

இந்த ஸ்காட்துரை மதுரையில் ஒரு நாள் பாண்டித்துரைத் தேவரை சந்தித்தார்.

பாண்டித்துரைத்தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத் தைத் தொடக்கியவர்.

தம்முடைய இல்லத்தையே தமிழ்ச்சங்கத்திற்காக வழங்கியவர்.

அப்படிப்பட்டவரை இந்த ஸ்காட்துரை சந்தித்து "இது மாதிரி... திருக்குறளையே சரி செய்து ஒரு புத்தகம் போட்டிருக்கின்றேன்!" என மிகவும் பெருமையாக கூற ஆரம்பித்தார்.

"இந்தாருங்கள் ஒரு பிரதி!" என்று ஒரு புத்தகத்தைக் கொடுத்தார்.

பாண்டித்துரை அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.

முதல் குறலே திருத்தப்பட்டு இருந்தது.

எப்படி இருந்தது தெரியுமா?

அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி
உகர முதற்றே உலகு

"பகவர் முதற்றே உலகு" என்பதற்குப் பதிலாக "உகர முதற்றே உலகு" என்று மாற்றி விட்டார்.

இப்படியே ஒரு குறட்பாக்களிலேயும் கைவச்சிருந்தார். அதை யெல்லாம் பார்த்ததும் பாண்டித்துரைதேவர் கேட்டார்.

"நீங்கள் இதிலே எத்தனை பிரதிகள் அச்சிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஐநூறு பிரதிகள் அச்சிட்டிருக்கிறேன்... அதிலே ஒரு இருநூறு பிரதிகள் வரைக்கும் வேண்டியவர்களுக்கெல்லாம் கொடுத்து விட்டேன். மற்றவையெல்லாம் சரியாக விலைபோகவில்லை. எல்லாம் அப்படியே என்னிடம்தான் இருக்கின்றது" என்றார் துரை.

"ஒரு பிரதி என்ன விலை?" என்று கேட்டார் இவர்.

'ஒரு ரூபாய்!' என்றார் அவர்.

அப்போது அது பெரிய தொகை.

"அனைத்தையும் என்னிடம் கொடுங்கள்... நான் வாங்கிக் கொள்கின்றேன்..." என்றார்.

300 ரூபாய் பணத்தையும் கொடுத்தார். ஸ்காட்துரைக்கு மிகவும் மகிழ்ச்சி... உடனே போய் அனைத்தையும் அனுப்பி வைத்தார்.

பாண்டித்துரை தேவர் அனைத்தையும் வாங்கினார். மண்ணிலே ஒரு குழியை வெட்டினார். புத்தகக் கட்டை குழியிலே போட்டார். தீக்குச்சி கொளுத்திப் போட்டார். கொளுத்தி விட்டுச் சொன்னார்.

"அந்தப் பித்துக்குளியிடம் இருந்த 300 பிரதியும் மற்றைய தமிழ் அறிஞர்கள் கண்ணிலே பட்டால் அவர்கள் கவலைப் படுவார்கள். புதிதாக திருக்குறள் படிக்கிறவர்களும் பிழையாகப் புரிந்து கொள்வார்கள். இதற்கு தகுந்த பரிகாரம் இதுதான்!" என்றார்.

அவர் இப்படி செய்த செய்தி ஸ்காட்துரைக்கு தெரியாது. அது தெரியாமலே அவர் போய் சேர்ந்து விட்டார். இதுவும் ஒரு தமிழ்த் தொண்டுதான் என்பதை இந்த நிகழ்ச்சியிலே இருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

எழுத்தாளர் ஒருவர் இருந்தார்.

அவர் ஒரு நாள் வந்தார். மிகவும் பெருமையாகச் சொன்னார்.

"சேர்! ஒரு சந்தோசமான விடயம்! இந்த வருடம் இலக்கியத்துக்கு நான் செய்திருக்கின்ற சேவையைப் பாராட்டி பெரிய விழாவுக்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள்" என்றார்.

"அப்படியா! மகிழ்ச்சி. இந்த ஆண்டு என்ன புத்தகம் எழுதியிருக்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"எதுவுமே எழுதவில்லை. அதுதான் இலக்கியத்துக்கு நான் செய்கின்ற பெரிய தொண்டு என்று சொல்லி இந்த பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தார்கள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜெனீவா சென்று சாட்சியமளிக்க தயாராகவே இருக்கின்றேன்

## விக்ரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரன் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுக்கு வந்தார். தன்னாட்சி அதிகார அரசாங்கத்தைக் கேட்டார். இதன் மூலம் ஒரு நாட்டுக்குள் தீர்வுக்கு வந்தார். மஹிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ச ஆகியோர் இதை எதிர்த்தனர். யுத்தம் செய்தனர், வென்றனர். இன்று என்ன நடக்கிறது. பெற்ற கடனை கட்ட கடன்படும் நிலை ஏற்பட்டுள்ளது என நவ சமசமாஜக் கட்சி தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாம் போராட்டத்தில் இருக்கும் அமைப்பைச் சார்ந்தவர்கள். நவ சம சமாஜக் கட்சி இல்லாத போராட்டம் நிச்சயம் இருக்காது. அனைத்து போராட்டங்களிலும் நாம் பங்காளர்களாகவே உள்ளோம்.

நடைபெற இருக்கும் மேல் மாகாண, தென் மாகாண சபைத் தேர்தல்களிலும் தனித்து போட்டியிட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இது ஒரு துரதிஷ்ட நிலையாகும்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் அமைப்பின் கீழ் ஒன்றாக இணைந்து போட்டியிட்டிருந்தால் பாரிய அங்கீகாரத்தை மக்களிடம் பெற்றிருக்க முடியும். தேசிய இனப்பிரச்சினைக்கு விடுதலை பெற்றுக் கொள்ளக்கூடியதான அழுத்தத்தை கொடுத்திருக்கும். சக கட்சிகள் இதற்கு இணங்கவில்லை. இதனால் நல்லதொரு சந்தர்ப்பம் நழுவிவிட்டது.

தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இன்று அடக்கி வாசிக்க முற்படுகின்றனர். ஜெனீவா சென்று சாட்சியமளிக்க பின்வாங்குகின்றனர். ஆனால் நான் ஜெனீவா சென்று சாட்சியமளிக்க தயாராகவே இருக்கின்றேன்.

தமிழ் மக்கள் மீது கொடுமைகள் புரியப்பட்டன. வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. நிலங்கள் பறிக்கப்பட்டன. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை என்பவற்றை அம்பலப்படுத்துவேன்.

அரசாங்கம் கொண்டு வந்த கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளைக் கூட அரசாங்கமே அமுல்படுத்த மறுக்கிறது என்பதை வெளிப்படுத்துவேன்.

நெல்சன் மண்டேலா எதைச் செய்தார். ஆரம்பத்தில் வன்முறையுடன் கூடிய அழிவுசெயற்பாட்டை முன்னெடுத்தார். அதில் தோல்வியடையவே பின்னர் ஜனநாயக பாதைக்குச் சென்றார். பிரபாகரன் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுக்கு வந்தார்.

தன்னாட்சி அதிகார அரசாங்கத்தை கேட்டார். இதன் மூலம் ஒரு நாட்டுக்குள் தீர்வுக்கு வந்தார். மகிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச ஆகியோர் இதை எதிர்த்தார்கள். மக்களை இனவாதம் ஊட்டி வீதிக்கு அழைத்தனர். ஆட்சிக்கும் வந்தனர்.

இதில் ஜே.வி.பியும் முழு பங்காளியாகும் யுத்தம் செய்தனர், வென்றனர் இன்று என்ன நடக்கிறது. பெற்ற கடனை கட்ட கடன்படும் நிலை காணப்படுகிறது.

மக்களுக்கு உதவாத அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இன்று சர்வதேசம் தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினை உள்ளதை ஏற்றுள்ளது.

அரசாங்கம் தீர்வை முன்வைக்க முன்வரவில்லை. இதனால் சர்வதேசத்தின் கண்டனத்துக்கு உள்ளாகி உள்ளது.

ஊழல்மிக்க ஆட்சியாளரை வீட்டுக்கு அனுப்ப சகலரும் ஒன்றிணைய வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 80 |
| தக்காளி | 30 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 40 |
| கரட் | 50 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 40 |
| பயற்றங்காய் | 120 | 200 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 110 | 130 | 120 |
| முருங்கைக்காய் | — | 800 | — |
| போஞ்சி | 50 | 40 | 60 |
| கத்தரிதம்புள்ள | 40 | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 30 | 30 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 30-40 |
| இராசவள்ளி | 70 | 90 | 100 |

# இராசி பலன்

25.01.2014
(தை 12, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
நவமி பிற்பகல் 4.42 மணிவரை
விசாகம் முன்னிரவு 11.45 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை

**மேடம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புக்கள் அதிகம், சான்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், சுவாரஷ்யமான நாள்.

**மிதுனம்** பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**கடகம்** புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த சுமை குறையலாம், தொலைதூரச் செய்திகள் மகிழ்ச்சிதரும், வாகன சுகத்தால் வளம் காண்பீர்கள்,. கல்வியில் மேன்மையுண்டு.

**சிங்கம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி** வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள், வாக்குவாதத்தைத் தவிர்ப்பதன் மூலம் வளம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தடைப்பட்ட சில காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** நண்பர்கள் பக்கபலமாக ஒத்துழைப்பு வழங்குவர், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பிள்ளைகளுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் குடிகொள்ளும்.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், வீட்டுப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும், தொழில் வளர்ச்சிக்கு அதிக பிரயாசை காட்ட முற்படுவீர்கள், பயணங்களால் மனச் சோர்வுகள் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு.

**தனுசு** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், தூரதேசத்திலிருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், அதிர்ஷ்டகரமான சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**கும்பம்** வீண்பழிகள் அகலும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, தந்தைவழி உறவினரால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, உடல்நலத்தில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மீனம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுக்கல்-வாங்கல்களில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்து மதத்திற்கு நடக்கும் நிந்தனை இந்துக்களின் மனங்களை காயப்படுத்தியுள்ளது

## சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் வண.சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

சிவபூமி எனப் போற்றப்பட்ட இலங்கையில் இந்துமதம் பல்வேறு இடர்களை சந்தித்து வருகிறது.

இவ்வாறு சர்வதேச இந்து மதக் குருமார் ஒன்றியத் தலைவர் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் ஆதங்கம் வெளியிட்டார்.

ஓம் நமசிவாய பிரார்த்தனைப் பவனியை நேற்று வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு ஆற்றிய உரையின் முழுமையும் வருமாறு,

ஓம் நமசிவாய பிரார்த்தனைப் பவனியானது சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் சிவனை ஆராதிக்கின்ற நிகழ்வாகும். இது எவ்விதத்திலும் எவருக்கும் எதிரானதாக நடத்தப்படுகின்ற நிகழ்வல்ல. இது ஆன்மீகப் பிரார்த்தனை. எமது சமயத்தினைப் பாதுகாப்பதற்கும் அதனைப் பின்பற்றும் மக்களை விழிப்புணர்வடையச் செய்வதற்குமான வழிபாடாகும். இது அரசியலுக்கும் கட்சிகளுக்கும் அப்பாற்பட்ட வகையில் பரிசுத்தமாக நடத்தப்படுகின்ற, சிவனடியார்களது பிரார்த்தனை என்பதனை திட்டவட்டமாக நாம் முதலில் கூறிக்கொள்கின்றோம்.

பழைமையும் சிறப்புமிக்கதுமான மதம் இந்துமதம். பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட இந்து சமயம் தற்பொழுது இலங்கையில் பல இடர்களை சந்தித்துக் கொண்டிருப்பது மன வேதனையைத் தருகின்றது.

இங்கு தற்பொழுது ஆலயங்கள் சூறையாடப்படுவது மலிந்து கொண்டிருக்கின்றது. ஆலயங்களை உடைப்பதும் அவற்றில் உள்ள தெய்வ விக்கிரகங்களை எடுத்துச் செல்வதும் தெய்வங்களை சுமக்கும் வாகனங்களை எடுத்துச் செல்வதும் பணம், பொருள், நகைகள் என்பவற்றை களவெடுப்பதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் திட்டமிடப்பட்டு ஆலயங்கள் இடிக்கப்படுகின்றன; அழிக்கப்படுகின்றன. இத்தனை செயல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அதனைக் க்ண்டும் காணாமலும் சம்பந்தப்பட்டவர்கள் இருப்பது இன்னும் மனவேதனையை அதிகரிக்கச் செய்கின்றது.

தமிழ் அரசியற் கட்சிகளும் இவ்விடயத்தில் அதிகமான கவனம் செலுத்தாததும் இதற்குக் காரணம் எனலாம். தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தினை இன்றும் அடையாளப்படுத்திக் கொண்டிருப்பது ஆலயங்கள்தான். எனவேதான் ஆலயங்கள் தாக்கப்படுகின்றது என்பதை தமிழ் தலைவர்கள் உணர்ந்து ஆலயங்களைப் பேண முன்வர வேண்டும்.

ஆலயங்களையும் அதன்சார் கலை கலாசாரங்களைப் பேணவும் பாதுகாக்கவும் அதற்கு என ஒரு அமைச்சு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு சட்டம் இடம் வகுக்க வேண்டும். தமிழ் கட்சிகள் சைவசமய விழுமியங்களை அறிந்த ஒருவரை முன்னிலைப்படுத்தி போட்டியிட வைத்து தெரிவாக்கி அமைச்சராக்குவது பொருத்தப்பாடாக அமையும். இதுபற்றி தமிழ்க் கட்சிகள் ஆராய்வது காலத்தின் தேவையாகும்.

திருக்கேதீஸ்வரப் புனிதப் பகுதி மனிதப் புதைகுழியாக மாறியிருப்பது மேலும் மன வேதனையை தருகின்றது.

இந்து சமயத்தின் தொன்மையை நாம் அறிகின்றோம் என்றால் அதற்குக் காரணம் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வாகும். இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிந்து வெளிப்பகுதியில் இந்து மதம் இருந்தமைக்கான சான்று உள்ளது என்றால் அங்கு இந்து சமயத்தை பின்பற்றுபவர்கள் இருந்துள்ளார்கள் என்பது தான் வரலாறு. அதுபோலத் தான் இங்கு எல்லா இடங்களிலும் இந்து ஆலயங்கள் அமைந்துள்ளன. ஆனால் ஆலயங்கள் அமைந்துள்ள எல்லா இடங்களிற்கும் செல்லமுடியாதுள்ளது. இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது, ஆலயங்களை பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமை என்பதேயாகும்.

தமிழ் வரலாறு இன்று எவ்வாறு திரிபுபடுத்தப்படுகின்றதோ அதே போன்று ஒவ்வொரு ஆலயங்களதும் வரலாறுகள், செவிவழிமரபு வரலாறுகள் என்பன தத்தம் ஆட்சிக்கு தக்கவாறு பரிபாலகர்கள், வழிபடுவோர்களால் திரிபுபடுத்தப்படுகின்றன. இதுவும் ஆலயத்தின் புனிதத்தினையும் மேன்மையையும் தெய்வ கீர்த்தியையும் குலைக்கின்றது. ஆலய வரலாறுகள் பாதுகாக்கப்படுவதற்கு பிரதேச செயலகங்கள், கலாசார திணைக்களங்கள் என்பன வரலாற்று காப்பகங்களை உருவாக்க வேண்டும்.

இந்து சமயம் தனது வரலாற்றில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளது. பல்வேறுபட்ட ஆட்சிக் காலத்தில் இந்து மதமும் ஆலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முறையும் அழிக்கப்பட்டாலும் மீண்டும் அவை எழுந்து நின்றன. இந்து சமயத்தையும் ஆலயங்களையும் அழித்தவர்களே பின்பு இந்து சமயம் பற்றி ஆய்வு செய்து அதன் சிறப்புகளையும் பழைமைகளையும் போற்றியுள்ளனர்.

இங்கு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் சரி யுத்தம் முடிவுற்ற பின்பும் சரி ஆலயங்களின் புனிதத் தன்மை பாதிப்புக்குள்ளான வண்ணமே உள்ளன. யுத்தகாலத்தில் குண்டுத்தாக்குதல்களால் ஆலயங்கள் சேதமடைந்தன. தற்போது ஆலயங்கள் சூறையாடப்படுகின்றன. கடந்த ஆண்டிலிருந்து இவ்வாறான செயல்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றமை இந்து மக்கள் மத்தியில் மிகுந்த துன்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்து மதகுருமார் ஒன்றியம் இது விடயமாகப் பல தடவைகள் பொலிசாருக்கு, தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு சுட்டிக்காட்டியது. ஜனாதிபதிக்கும் அரச அதிபர் ஊடாக மகஜர் மூலம் எடுத்துக்கூறியிருந்தோம். ஆலயங்கள் உடைக்கப்படுவதும், தெய்வ விக்கிரகங்கள் உடைக்கப் படுவதும், களவாடப்படுவதும் ஆலயங்களிற்கு சொந்தமான நகைகள், காசுகள் திருடப்படுவதும், தெய்வ விக்கிரகங்களை அடியோடு பெயர்ப்பது மற்றும் வாகனங்கள், பித்தளைப் பொருட்கள் திருடப்படுவது, ஆலயங்களிற்கு சொந்தமான காணிகளை அபகரிப்பது என பல நிகழ்வுகள் இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இது முற்று முழுதாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கு பொலிஸாரும் மற்றும் அரச அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்து மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலயங்கள் தற்பொழுது புதிதாக கட்டப்படுகின்றன. இருக்கின்ற ஆலயங்கள் பல மண்டபங்கள் எழுப்பப்பட்டு புதுப்பொலிவு பெறு கின்றன. குடமுழுக்குகள் திருவிழாக்கள், விரத நிர்ணயங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆனாலும் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் குருமார்களும் சரி, பரிபாலன சபையினரும் சரி கலைவிற்பன்னரும் சரி அவரவர்கள் சொந்த முடிவில் சிலவேளைகளில் ஆலய கைங்கரியங்களை நடத்துகின்றார்கள். வேதாகம முறைப்படி இடம்பெறும் இந்துசமய கைங்கரியங்களில் அதனை விடுத்து அதிலிருந்து நழுவுவதனால் சமயத்திற்கு களங்கம் ஏற்படுவதோடு சமயத்தின் மீது நம்பிக்கையும் குறைந்து வருகின்றது. இச்செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும்.

### இந்துகலாசார விடயங்களில் அரசியல் நுழைவு

சிறிது காலமாக தமிழ்நாட்டு அரசியலில் இந்து சமயம் சிக்கித் தவிக்கின்றது என்றால் மிகையாகாது. எமது தொன்மையான-மரபுவழிவந்த பாரம்பரியமான சடங்குகள், விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பன அக்காலத்திலேயே சாஸ்திர ரீதியாக ஞானிகள், துறவிகள், சித்தர்கள் மற்றும் குருமார்களால் நிர்ணயிக்கப்பட்டு நடந்து வருகின்றன. அதனை இன்று விஞ்ஞான ரீதியாக சரி என ஏற்றுக் கொண்டுள்ள உலகம் பல ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கின்றது.

அப்படியிருக்கையில் இன்று அரசியல் காரணங்களுக்காக இந்து சமய விழுமியங்கள் மழுங்கடிக்கப்படும் வகையில் இயற்கைக்கு மாறாக அரசியல் தலைவர்கள் இந்து சமய விழாக்களை, பண்டிகைகளை நிர்ண யித்துக்கொண்டு அதனை கொண்டாட முற்படுகின்றார்கள். இதுபோன்ற நடவடிக்கையாலும் சினிமாவாலும் இந்து சமயத்தின் மீது களங்கம் ஏற்படுத்தப்படுகின்றது.

சமய குருமார்களை அவமதித்தல், குருமார்கள் போன்று வேடம் அணிந்து நடனமாடல், காவியுடையினை தேவையற்ற விதத்தில் பயன்படுத்தல் என பல்வேறு வகையில், கதைகளுக்கு சம்பந்தமில்லாமல் சினிமாவில் நகைச் சுவைக்காக காட்டப்பட்டு இந்துக்களையும் குருமார்களையும் வேதனை அடையச் செய்கின்றார்கள். இதுபோன்ற பல்வேறு சம்பவங்களால் இந்து சமயம் பின்னடைவுகளைக்கண்டு வருகின்றது.

வடபுலத்தில் ஒவ்வொரு ஆலயங்களும் கலாசார மையங்களாகத் திகழ வேண்டும். ஒழுக்கத்தை, அறத்தை, நீதியை வழுத்தும் இடங்களாக திகழவேண்டும். மக்கள் வாழ்க்கைக்கு ஒளியூட்டுவதாக ஆலயங்கள் அமைவதோடு அன்னசாலைகளாக, தர்மசாலைகளாக, கல்விச்சாலைகளாக ஆலயங்கள் திகழவேண்டும். இவற்றிக்கு ஆலய குருமார்கள், பரிபாலன சபையினர், தர்மகர்த்தா சபையினர், இந்து இளைஞர் மன்றங்கள், மாதர் அமைப்பினர்கள், தொண்டர் சபையினர்கள் என எல்லோரும் பாடுபடுவது காலத்தின் அவசியமாகும்.

ஒரு கிராமம் வளர்ச்சி காண்பதற்கு அவ்வூர் மக்கள் ஒன்று கூடும் இடமாக ஆலயம் இருக்கவேண்டும். அதை விடுத்து போட்டிக்கு போட்டியாக ஆலயங்கள் கட்டுவதும் விழாக்கள் கொண்டாடுவதும் அதன் மூலம் ஒவ்வொரு குழுக்களாகப் பிரிந்து சண்டையையும் பிரிவினையையும் வளர்ப்பதற்கு ஆலயங்கள் காரண மாகக் கூடாது. பெரும்பாலான ஆலயங்கள் இன்று நீதிமன்றங்களில் நிற்கின்றன.



கோயில் பிரச்சினை, காணிப்பிரச்சினை, குருமார் பிரச்சினை, நிர்வாகப் பிரச்சினை என பல வகையில் முரண்பட்டுக் கொண்டு நீதிமன்றங்களை நாடியுள்ளன. இவை தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறான காரியங்களாலும் இந்து சமயத்திற்கு அவப்பெயர் உண்டாவதோடு புனிதத்தன்மையும் குறைந்து செல்கின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்துள்ள ஆலய பிணக்குகளை தீர்ப்பதற்கு வடமாகாண சபை, குருமார்களின் ஆலோசனைகளைப் பெற்று உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஒரு மாத காலமாக ஓம் நமசிவாய மந்திர லிகித ஜபம் மூலம் கிடைக்கப்பெற்ற திருநாமங்கள் சுமார் இரண்டு கோடியை கடந்துள்ளமை சைவ சமய வரலாற்றில் ஆன்மீக சாதனையாகும்.

இவற்றின் திருவருட் பேறாக ஆலயங்கள் சிலவற்றில் திருடப்பட்ட பொருட்கள் மீண்டும் கிடைத்துள்ளன. இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பங்களாதேஷ் பிரதமர் கூறியிருப்பதும் பாகிஸ்தானில் 900 வருடங்கள் தொன்மைமிக்க சிவாலயம் கடந்த 65 ஆண்டுகளாக பூட்டப்பட்டிருந்த நிலையில், அண்மையில் திறக்கப்பட்டதும் சிதம்பரம் திருக்கோயில் அரசியலிலிருந்து விடுபட்டு மீண்டும் தீட்சிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை போன்றவற்றினை இங்கு குறிப்பிடலாம்.

எனவே சைவ மக்களாகிய நாம் ஓம் நமசிவாய என்னும் மந்திரம் மூலம் எமது மனத்தினை நல்வழிப்படுத்தி நாவினால் ஓதியும் கரத்தினால் எழுதியும் ஜபம் செய்தும் லிகிதஜபம் செய்தும் எமது ஆன்ம பலத்தினைப் பெருக்க சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் வருடந்தோறும் மார்கழி மாதம் புனித திருவெம்பாவை தினங்களை இதற்காக அமைத்துள்ளதுடன் மக்களை இதில் இணைத்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம் என அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவை பிரித்து யுத்த வெற்றிக்கு அடித்தளமிட்டவர்கள் நாமே

## மார்தட்டுகிறது ஐ.தே.க.

கருணாவை பிரித்து விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தி யுத்தத்தை வெற்றி பெறுவதற்கு ஐ.தே.கட்சி அரசாங்கமே அடித்தளமிட்டது. என ஐ.தே.கட்சி குருநாகல் மாவட்ட எம்.பி. அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாழ்க்கை செலவு அதிகரிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது அரசாங்கம் அன்று கலைக்கப்படாமல் இருந்திருந்தால் மன்னாரிலிருந்து தமிழ் நாட்டுக்கு பாலம் அமைத்து உள்நாட்டு வருமானத்தை அதிகரித்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு கருணா அம்மானை அவ்வியக்கத்திலிருந்து பிரித்து புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தி யுத்தம் வெற்றி பெறுவதற்கான அடித்தளமிட்டது ஐ.தே.கட்சியே. அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யுத்தம் வெற்றி பெறச் செய்யப்பட்டது.

மன்னாரில் விமான நிலையம் அமைப்பதற்கும் மன்னாரிலிருந்து தமிழ் நாட்டுக்கு பாலம் அமைத்து அங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் பயணிகளை இங்கு அமைக்கப்படும் விமான நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டது.

இதன் மூலம் நாட்டுக்கு பாரிய வருமானம் கிடைத்திருக்கும் இவ்வாறானதொரு நிலையிலேயே எமது அரசாங்கம் கலைக்கப்பட்டது என்றார். (அ-2)


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



திரு. க.இ.இராசசேகரம்
SLPS-1 SC,trd,
B.A, Dip.in.ed.
அதிபர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
தலைவர்: கோப்பாய் கோட்ட அதிபர் சங்கம்

17 வருடங்கள் ஆசிரியராகவும் 17 வருடங்கள் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் அதிபராகவும் சிறப்புறக் கடமையாற்றி பாடசாலையையும் அதிபர் சங்கத்தையும் சிறந்த முறையில் வழி நடத்தி 25.01.2014 இல் ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக வாழ வெள்ளெருவை விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஊழியர்கள். (சி-6315)
அதிபர் சங்கம் கோப்பாய் கல்விக் கோட்டம்.


# திருத்த வேலைகளுக்காகவே நுரைச்சோலை மூடப்பட்டது

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின்நிலைய முதலாம் கட்டத்தில் ஏற்பட்ட குறைபாடுகள், கோளாறுகள் இரண்டாவது கட்டத்தில் ஏற்படுவதை தவிர்க்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கோளாறு மற்றும் திருத்த பணிகள் காரணமாக இதுவரை நுரைச்சோலை அனல் மின்நிலையம் 262 நாட்கள் மூடப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

நிலையியற் கட்டளையின் கீழ் அநுரகுமார திசாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நுரைச்சோலை அனல் மின் நிலைய முதலாம் கட்டத்திற்காக 58,706 மில்லியன் ரூபாவும் இரண்டாவது கட்டத்துக்கு 92,195 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டது.

சாதாரண திருத்தப்பணிகளுக்காக நுரைச்சோலை அனல் மின் நிலையம் 107 நாட்கள் மூடப்பட்டன. இரண்டாம் கட்டப் பணிகளுடன் இணைந்த செயற்பாடுகளுக்காக 5 நாட்களும் குளிரூட்டியில் ஏற்பட்ட கோளாறுக்காக 14 நாட்களும் வேறு கோளாறுகள் காரணமாக 136 நாட்களும் மின் உற்பத்தி நிலையம் மூடப்பட்டன.

2011 இல் இருந்து 2013 டிசெம்பர் வரை நுரைச்சோலை மின் நிலையத்தினூடாக 3 ஆயிரத்து 646 ஜிகா வோர்ட் மணித்தியாலங்கள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. திருத்தப் பணிகள் காரணமாக ஆயிரத்து 391 ஜிகாவோர்ட் மணித்தியாலங்களை இழக்க நேரிட்டது.

நுரைச்சோலை அமைக்கப்பட்டதன் மூலம் தனியாரிடம் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு செலவிடும் 65 பில்லியன் ரூபாவை மிஞ்சவைக்க முடிந்தது. இரண்டாம் கட்டத்தில் இது போன்ற குறைபாடுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# துவிச்சக்கர வண்டியை பெற்றுக்கொள்க

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் கடந்த 3 ஆம் திகதி வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட இலக்கம் 56153 229 என்ற துவிச்சக்கர வண்டியை அதன் உரிமையாளரை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி வல்வெட்டித்துறைப் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்ட வேளை அநாதரவாக கிடந்த துவிச்சக்கர வண்டியை மீட்டு நீதிமன்றில் பாரப்படுத்தியிருந்தனர்.

குறித்த துவிச்சக்கர வண்டியை உரிமையாளர் 6 மாத காலத்தினுள் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் ஏலத்தில் விடப்படும் எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-9-24)


மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)







மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)



- முக அழகுக் கலை (Facials)
- Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- Nail art
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம் வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-01-2014
புதன் காலை 9.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 01-02-2014
சனி காலை 9.00 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
இயக்குநர்



கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 48 செவ் 7 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L / கனடா PR
தொ.இ: B/2734

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 23 செவ் 8 ல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L / இரும்பு கடைச்சல் தொழில்
தொ.இ: B/2735

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 24 செவ் 4 ல்
உயரம்: 5'6" தகைமை/தொழில்: A/L நிரந்தர தொழில் (பிரான்ஸ் PR)
எதிர்பார்ப்பு: உள்நாட்டவர் மட்டும்
தொ.இ: B/2736

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 54 செவ் 1 ல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L / சுப்பர் மார்க்கெட (பிரான்ஸ் PR)
தொ.இ: B/2738

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 11 சூரி செவ் 10 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HNDA / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: G/2744

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 12 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கணக்காளர் (பிரான்ஸ் PR)
எதிர்பார்ப்பு: பிரான்ஸ் மட்டும்
தொ.இ: G/2745

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 1 ¾ சூரி செவ் 11 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பொறியியலாளர், MSc (அவுஸ்திரேலியாவில் படிக்கிறார் - Not PR)
தொ.இ: G/2748

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 20 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, CBF, DBF / Banking Assistant
தொ.இ: G/2752

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கம்பன் கழகத்தின் இசை ஆராதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடத்தும் தியாகராஜ சுவாமிகளுக்கான இசை ஆராதனை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.


இந் நிகழ்வின் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ.தர்ஷனன் ஆற்றுவார்.

இதேவேளை மங்கல வாத்தியக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை மாலை நிகழ்வுகள் 4 மணிக்கு ஆரம்பமாகும்.


இதன்போது மங்கல இசை நாதஸ்வரத்தினை ரஜீந்திரன் சிவகுமார், தவிலினை ரவீந்திரன், சதீஸ்குமார், தெட்சணாமூர்த்தி ஆகியோர் இசைப்பார்கள்.

குரலிசைப் பாட்டினை ந.பரந்தாமன் பாட வயலினை கி.பத்மநாதன், மிருதங்கத்தினை க.கண்ணதாசன், கடத்தினை கு.ரவிசங்கர், கெஞ்சிராவை கிருபா அனந்தகோபன், முகர்சிங்கினை ந.சதீஸ்குமார் ஆகியோர் இசைப்பார்கள்.

குழலிசை புல்லாங்குழலினை கு.நக்கீரன், வயலினை அ.ஜெயராமன், மிருதங்கத்தினை கிருபா அனந்தகோபன், கடத்தினை கு.ரவிசங்கர், கெஞ்சிராவினை ப.சியாமகிருஷ்ணா ஆகியோர் இசைப்பார்கள். (அ-2)




# அடிப்படை வசதிகள் இன்றி நாகர் கோவில் மக்கள்



வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லையென மக்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

நாட்டில் நடத்தப்பட்ட யுத்தத்தினால் 2002 ஆம் ஆண்டு நாகர்கோவில் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து பின்னர் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இப் பகுதி மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாததினால் அவர்கள் தற்காலிக குடிசையில் பல இன்னல்களின் மத்தியில் வாழ்ந்து வருகின் றனர்.

அத்தோடு இக் கிராமத்திற்கான குடிநீர் சேவையை பருத்தித்துறை பிரதேச சபையினர் மேற் கொண்டு வருகின்ற போதும் அதனுடைய சேவை போதுமானதாகக் காணப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போக்குவரத்து, வீதிகள் என்பன சீரின்மையாகக் காணப்படுவதாகவும் அன்றாடம் வாழ்வாதாரத்தினை நகர்த்த தாம் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கிற்கு வருகை தந்த அமெரிக்க தூதுவர் மிச்சேல் சிசனிடம் தங்களின் அவல வாழ்வினை நாகர் கோவில் கிராம மக்கள் எடுத்துரைத்துள்ளனர். (அ-9-24)

# கண் பரிசோதனை மருத்துவ முகாம்

இணுவில் அறிவாலயமும் லயன்ஸ் கழகமும் நடத்தும் கண் பரிசோதனை இலவச மருத்துவ முகாம் இணுவில் அறிவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கண் பரிசோதனையை கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ். குகதாசன், அவுஸ்திரேலிய விசேட கண் வைத்திய பரிசோதனையாளர் நித்திலா ஆகியோர் மேற்கொள்ளவுள்ளனர்.

இதில் கண்புரை நோயாளர்கள் இனங்காணப்பட்டு சத்திரசிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படுவதுடன் கண்பார்வை குறைந்தவர்களுக்கு பொருத்தமான இலவச கண்ணாடிகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடைதொகுதியின் கீழ் தளத்தில் மரக்கறி கடையை அமைக்குக வியாபாரிகள் கோரிக்கை

பருத்தித்துறை பொதுச் சந்தையின் மரக்கறிச் சந்தை வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை ஒதுக்கப்பட்ட மேல்மாடி கடைகளில் மேற்கொள்ளாது தரைப் பகுதியில் வைத்து மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி பொதுச் சந்தையில் மேல்மாடி கடைகள் மரக்கறி விற்பனைக்காக ஒதுக்கப்பட்டது. ஆயினும் மரக்கறிப் பொதிகளை தங்களால் மேல் மாடிக்கு கொண்டு செல்வது கடினமாகவுள்ளதெனவும் நுகர்வோர் மாடிப் படிகளில் ஏறி மேலே வந்து கொள்வனவு செய்வது குறைந்து வருவதாகவும் இதனால் தமது தொழில் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்து நேற்று முன்தினம் கடையடைப்பு மேற்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் முதல் மேல் மாடியிலுள்ள கடைகளில் வியாபாரத்தில் ஈடுபடாமல் மாறாக சந்தையின் தரைப் பகுதியில் கடைகளை அமைத்து வியாபாரத்தை முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் இவர்களின் பொருட்களுக்கான பாதுகாப்பு இரவு வேளைகளில் மின்விளக்கு என்பன நகர சபையினால் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் தமது பொருட்களின் பாதுகாப்பிற்காக நேற்றிரவு 2 வியாபாரிகளே இருந்துள்ளனர்.

அத்தோடு இவர்களால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கடைகளை அண்மித்த பகுதிகளிலிருந்த கழிவுகளும் அகற்றப்படவில்லை.

இது தொடர்பில் வியாபாரிகள் கருத்து வெளியிடுகையில்,

தமக்கான அனைத்து சேவைகளையும் நகர சபையினர் நிறுத்தியுள்ளனர்.

நாங்கள் மேல்மாடிக் கடையில் இவ்வளவு நாட்களாக மேற்கொண்ட தொழிலில் கிடைத்த வருமானத்தை இரண்டு நாட்களிலே பெற்றுக் கொண்டுள்ளோம்.

எனவே பருத்தித்துறை நகர சபையினர் எமக்கு சந்தையின் தரைப் பகுதியில் கடைகளை அமைத்துத்ர ஆவன செய்ய வேண்டும் என்றனர். (அ-9-60)

# பரிசளிப்புவிழா

(கரவெட்டி)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 க்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பொ.வியாகேசு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-9-24)








இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க வலியுறுத்தி சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஓம் நமசிவாய என்ற மந்திர ஒலிப்புடன் வாகனப் பவனி நேற்று முற்பகல் 11 மணியளவில் வண்ணார் பண்ணை சிவன் கோவிலிருந்து ஆரம்பமாகி கே.கே. எஸ். வீதியூடாக பெருமளவான பொது மக் களுடன் கீரிமலை நோக்கி சென்ற போது...

(படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி ஆதரவாளர்களே மேற்குலக நாடுகளில் இயங்கி வருகின்றனர்



## வதிவிட பிரதிநிதி ரவிநாத்

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மேற்குலக நாடுகளில் தொடர்ந்தும் இயங்கி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஜெனீவாவில் கடமையாற்றி வரும் உலக நாடுகளின் ராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளித்த போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேற்குலக நாடுகளில் வாழ்ந்து வரும் புலி உறுப்பினர்களும் அனுதாபிகளும் தொடர்ந்தும் செயற்பட முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

புலி ஆதரவாளர்களின் நடவடிக்கைகளினால் நல்லிணக்க முனைப்புக்கள் பாதிக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். புலி ஆதரவாளர்களின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த மேற்குலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# எவரது தொலைபேசிகளையும் அரசு ஒட்டுக்கேட்பதில்லை

(கொழும்பு)

பொதுமக்கள் அல்லது வேறு எவரது தொலைபேசிகளையும் ஒட்டுக் கேட்பதில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை எனக் கூறினார்.

போர் நடைபெற்ற காலத்தில் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் நேரடியாக பதிலளிக்கவில்லை.

தனிப்பட்ட தொலைபேசி அழைப்புகளை கண்காணிக்க அரசாங்கம் எந்த உபகரணங்களையும் கொள்வனவு செய்யவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### அருட்தந்தை S.J. பிரான்சிஸ் (அ.ம.தி)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை S.J பிரான்சிஸ் 23 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இரங்கல் திருப் பலி இன்று மாலை 4 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.



### திருமதி. பார்வதி கிருஸ்ணன்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதி கிருஸ்ணன் 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.



### ஞானப்பிரகாசம் அல்பேட்

குருநகரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Nurenberg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அல்பேட் 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இரங்கல் திருப்பலி 27 ஆம் திகதி திங்கட் கிழமை காலை10 மணிக்கு Kirche st;stephan Waldluststr .70 90480 Nuernberg Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி. தையலம்மை வேலாயுதன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட தையலம்மை வேலாயுதன் 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### அப்புத்துரை பொன்னுத்துரை

தனங்கிளப்பு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் லவ்லேன் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பொன்னுத்துரை 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மருதனார் மடம் பூவோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி. இராசரத்தினம் நாகேஸ்வரி

4ஆம் கட்டை கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தவருமாகிய இராசரத்தினம் நாகேஸ்வரி 23 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று அமெரிக்காவில் நடைபெறும்.

# தொற்றாநோய் தரவுகளைப் பெற கணனி மென்பொருள் தயாரிப்பு

(கொழும்பு)

தொற்றா நோய்கள் தொடர்பான தரவுகளைச் சரியாகவும், திறம்படவும் பெற்றுக் கொடுப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் புதிய கணனி மென்பொருளை மூன்று வைத்தியர்கள் உற்பத்தி செய்துள்ளனர்.

பேராசிரியர் வஜிர திசாநாயக்காவின் உத்தரவிற்கமைய டாக்டர் தீபால் விஜேசூரிய, டாக்டர் கோசல ஸ்ரீநாத்ரன்தெனிய, டாக்டர் ரொஹான் ஹேவா பத்திரன ஆகியோரே "NDC DATA COLLECTIN & ANALYSIS SOFTWARE" என்ற இந்த மென்பொருளை தயாரித்துள்ளனர்.

நாளாந்தம் ஆயிரம் பேர் மரணிக் கின்றனர். இதில் 650 பேர்வரை தொற்றா நோய்களால் மரணிக்கின்றனர்.

அரச வைத்தியசாலைகளில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். நாடு முழுவதும் 668 சுக வாழ்வு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் அமைக கப்பட்டுள்ள இந்த சிகிச்சை நிலையங்களில் நீரிழிவு இரத்த அழுத்தம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் சீனியின் அளவைப் பரிசோதித்தல், சிகிச்சை பெறுதல் போன்றவற்றுக்கு வரும் நோயாளர்கள் பற்றி சரியான தரவுகள் பெறப்படும்.

அவை சிகிச்சை நிலைய, மாவட்ட, தேசிய மட்டங்களாக ஆய்வு செய்யப்படும். இதற்கு இந்த மென்பொருள் பயன்படுத்தப்படும்.

சுக வாழ்வு சிகிச்சை நிலையங்களில் தரவுகள் அதே இடத்திலேயே மென்பொருளில் உள்ளடக்கப்பட்டு ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

அந்த தரவுகள் சிகிச்சை நிலைய மாவட்ட மாகாண மட்டத்தில் வழங்கப்படும்.

இதனைவிட "GIS – GLOBAL INFORMATION SYSTEM" தொழில்நுட்பம் மூலம் தரவுகள் பெறப்பட்டு மென்பொருள் மூலம் மேற்கொள்ள இயலும்.

இதற்கு 1.6 மில்லியன் ரூபா 'நோமா' திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

மருத்துவ பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் நோமா' திட்டம் மூலம் இந்த நிதி செலவிடப்பட்டுள்ளது.

இத்தகைய மென்பொருளை உருவாக்க 20 மில்லியன் ரூபா செலவாகும். பராமரிப்புக்கு நான்கு மில்லியன் ரூபா வருடாந்த செலவீனம் ஏற்படும்.

இந்த நிதியை முழுமையாக சேமிக்க சுகாதார அமைச்சினால் முடிந்துள்ளது.

இந்த மென்பொருள் இலவசமாக சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

தேசிய இரத்த நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவத்தில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவிடம் டாக்டர் தீபால் விஜேசூரிய, பேராசிரியர் வஜிர திசாநாயக்க ஆகியோர் இந்த மென்பொருளை அன்பளிப்பாக வழங்கினர்.

சுகாதார அமைச்சின் செயலர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபால ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

# இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை

## இலங்கை கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையனர் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து 683 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். நேற்றுமுன்தினம் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த அவர்களை, இலங்கை கடற்படையினர் மீன்பிடிக்க விடாமல் கற்களை வீசியும் வலைகளை அறுத்தும் விரட்டியடித்துள்ளனர்.

மேலும் கச்சதீவு பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என எச்சரித்துள்ளனர்.

இதனால் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 2ஆயிரத்து 700 மீனவர்களும் மீன் பிடிக்காமல் வெறுங்கைகளோடு திரும்பினர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இந்திய-இலங்கை மீனவப் பிரதிநிதிகளிடையே பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில் இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

எனினும் கச்சதீவு அருகில் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக இந்திய மீனவர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை, இலங்கை கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய மறுத்துள்ளார். (அ-2)

# மாத்தளையில் நிலம் தாழிறக்கம்

மாத்தளை நகர பிரதான வீதியில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில், கடந்த 22 ஆம் திகதி அதிகாலை 10 அடிகள் ஆழத்திற்கு நிலம் தாழிறங்கியதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாத்தளைப் பிரிவு நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்தார்.

நிலம் தாழிறங்கியது தொடர்பான தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு வருகை தந்த மாத்தளை மாவட்ட புவியியல் மற்றும் பூகப்பவியல் நிபுணர்கள் நிலம் தாழிறங்கிய இடத்தைப் பார்வையிட்டனர்.

தாழிறக்கம் ஏற்பட்டுள்ள நிலையத்தையும், அதிலிருந்து அகற்றப்பட்டுள்ள மண்ணையும் ஆய்வுசெய்த பின்னரே இது தொடர்பான ஆய்வு ரீதியான கருத்தை தன்னால் தெரிவிக்க முடியுமென மொறேமட இதன்போது தெரிவித்தார். (அ-2)

# ஆஸி.கடற்படையினர் அகதிகளை ஒருபோதும் கொடுமைப்படுத்தவில்லை

## ஆஸி. அரசாங்கம் தெரிவிப்பு

அவுஸ்திரேலிய கடற்படையினர் அகதிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதாக வெளியாகியுள்ள செய்திகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் மறுத்துள்ளது.

அகதி அந்தஸ்து கோரிச் சென்ற ஒரு குழுவினர் கடலில் தடுக்கப்பட்டு கப்பலின் இயந்திர அறையில் இருந்த சூடாக்கப்பட்ட குழாய்களினால் சுடப்பட்டு துன்புறுத்தப்பட்டதாக முறையிட்டிருந்தனர்.

தாம் அவுஸ்திரேலியக் கடற்படையினரால் மீண்டும் இந்தோனேசியாவிற்கு இட்டுச் செல்லும் போதே, இந்த சம்பவம் இடம்பெற்றதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டினை அவுஸ்திரேலிய அரசாங்கம் நிராகரித்திருந்த போதிலும், அகதி அந்தஸ்து கோருபவர்கள், வெப்பக் குழாய் சூட்டுக்கு இலக்காகியிருப்பதை அவதானிக்க கூடியதாக இருப்பதாக இந்தோனேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை தாம் பெற முயற்சிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக வோஷிங்டனில் உள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலியா பிஷப் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கடற்படை மிகவும் கட்டுப்பாடான தொழிற்பாட்டைக் கொண்டுள்ள படையென தெரிவித்துள்ள அவர் இப்படியான துன்புறுத்தல் சம்பவத்துடன் அவர்கள் தொடர்புபட்டுள்ளார்கள் என்று எண்ணியும் பார்க்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கந்தர்வனின் சாபம்



நிஷாதபுரியின் மன்னன் யாசோதரன் தன் குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆட்சி புரிந்துவந்தான். ராஜ்யத்தின எல்லையிலிருந்த காடுகளிலிருந்து கொடிய மிருகங்கள் அடிக்கடி கிராமங்களில் புகுந்து மக்களுக்கு இன்னல்கள் விளைவித்ததால், அவற்றை வேட்டையாடத் திட்டமிட்டு ஒரு நாள அவன் தன் பரிவாரங்களுடன் எல்லையோரக் காடுகளுக்குள் புகுந்தான்.

யசோதரன் வேட்டையாடிக்கொண்டிருக்கையில், வானிலிருந்து ஒரு கந்தர்வனும் ஒரு கந்தர்வப் பெண்ணும் மலை புச்சியில் இறங்கி சற்றே இளைப்பாற அமர்ந்தனர். அமரன் என்ற அந்த கந்தர்வன், கந்தர்வப் பெண்ணான சர்மிளா மீது மிகவும் அன்பு கொண்டிருந்தான். மலை உச்சியில் அவர்கள் இளைப் பாறிக் கொண்டிருக்கும் போது, அவன் அவளை நோக்கி, "சர்மிளா! இந்த மலையுச்சியிலிருந்து கீழே புள்ள காட்சிகளைப் பார்! ஒவ்வொன்றும் இயற்கையின் எழிலைப் பறைசாற்றுகின்றன. ஆனால் அவை ஒன்று கூட உன் அழகுக்கு இணையாகாது" என்று கூறினான்.

ஆனால் அவள் அவன சொல்வதைச் சிறிதும் கவனிக்கவில்லை. காட்டில் தன் புரவியில் அமர்ந்து காட்டு விலங்குகளைத் துரத்தும் யசோதரனையே வைத்தக் கண் வாங்காமல் பார்த்து ரசிப்பதைக் கண்டதும், பொறாமையினால் அவன் இதயம் பற்றி எரிந்தது. "நான் உன் அழகில் மயங்கி உன்னை வர்ணித்துக் கொண்டு இருக்கும்போது, நீ ஒரு மனிதனின் அழகை இரசித்துக்கொண்டிருக்கிறாய். பார், இப்போது அவனை என்ன செய்கிறேன் என்று!" என்று சீறிக்கொண்டே யசோதரனுக்கு சாபம் கொடுத்தான்.



திடீரென யசோதரன் ஒரு சித்திரக்குள்ளனாக மாறிவிட்டான். தன் உருவ்ம் மாறிப் போனதைக் கண்ட யசோதரன் பலத்த அதிர்ச்சியடைந்தான். அந்தப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்த ஒரு முயல் அவனை மோதித் தள்ளிக் குட்டிக்கரணமடிக்கச் செய்தது. அதைக் கண்டு அமரன் விழுந்துவிழுந்து சிரித்தான். "சர்மிளா! பார்த்தாயா அந்த மனிதனின் கதியை?" என்று பரிகாசம் செய்தான்.

"அடப்பாவி! என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று அலறினாள் சர்மிளா. "அவன் குதிரை மீது வாயு வேகமாச் செல்லும் காட்சியைத்தான் ரசித்தேனே தவிர, அவன அழகில் மயங்கவில்லை. இத்தனை பொறாமை பிடித்தவனா நீ?" என்று சொல்லிவிட்டு வானில் பறந்துவிட, திடுக்கிட்டு போன அமர அவளை சமாதானப்படுத்தியவாறே வானில் அவளைப் பின் தொடர்ந்தான்.....

(தொடரும்)





- 1327 - 14 வயது மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1494 - இரண்டாம் அல்பொன்சோ நேப்பில்ஸ் மன்னனாக முடிசூடினான்.
- 1498 - போர்த்துக்கீச நாடுகாண்பயணி வாஸ்கோ ட காமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.
- 1755 - மாஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1882 - வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.
- 1918 - உக்ரேன் மக்கள் போல்ஷெவிக் ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தனர்.
- 1924 - முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பிரான்சில் ஷாமனீ என்ற இடத்தில் ஆரம்பமானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: தாய்லாந்து ஐக்கிய அமெரிக்கா மீதும் ஐக்கிய இராச்சியம் மீதும் போரை அறிவித்தது.
- 1949 - சீனக் கம்யூனிஸ்டுகளின் படைகள் பீக்கிங்கினுள் நுழைந்தன.
- 1949 - இஸ்ரேலில் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் David Ben-Gurion பிரதமரானார்.
- 1955 - சோவியத் ஒன்றியம் ஜேர்மனி மீது அதிகாரபூர்வமாக போரை நிறுத்தியது.
- 1971 - உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஓபோட் ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்டு இடி அமீன் தலைவரானார்.
- 1971 - இந்தியாவின் 18வது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1981 - மா சே துங்கின் மனைவி ஜியாங் கிங் இற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
- 1986 - தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகாண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1994 - நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.
- 1995 - யோசப் வூாஸ் அடிகளார் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.
- 2002 - விக்கிப்பீடியா மீடியாவிக்கி மென்பொருளுககு ம்மாறியது.
- 2004 - ஒப்போர்ச்சுனிட்டி தளவுளவி (MER-B) செவ்வாயில் தரையிறங்கியது.
- 2005 - இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மந்திராதேவி என்ற இடத்தில் கோயில் ஒன்றில் சனநெரிசலில் சிக்கி பெண்கள், குழநதைகள் உட்பட 258 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - சூரியக் குடும்பத்திற்கு வெளியே பால் வழியின் நடுவிற்குக் கிட்டவாக பூமியில் இருந்து 21,500 - 3,300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG-390Lb என்ற கோள் கண்டு பிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1627 - ரொபேர்ட் பொயில், ஐரிஷ் வேதியியலாளர் (இ. 1691)
- 1872 - பி. ஆர். ராஜமய்யர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர் (இ. 1898)
- 1917 - ஈலியா பிரிகோஜின், நோபல் பரிசு பெற்ற ருசிய அறிவியலாளர் (இ. 2003)
- 1928 - எடுவார்ட் ஷெவார்டுநாட்சே, ஜோர்ஜியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்
- 1933 - கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் (இ. 2009)
- 1941 - செங்கை ஆழியான், ஈழத்து எழுத்தாளர்
- 1949 - போல் நர்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

### இறப்புகள்

- 1922 - சுன்னாகம் குமாரசாமிப் புலவர் (பி. 1855)
- 2005 - பிலிப் ஜான்சன், அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் (பி. 1906)
- 2006 - நெல்லை கிருஷ்ணமூர்த்தி, கருநாடக இசைக் கலைஞர்



### இடி அமின்

இடி அமின்... உச்சரிக்கும் போதே நம்மை உலுக்கிப் போடுகின்ற பெயர்! முந்நூறு பவுண் எடையுடன் 6 அடி, முன்று அங்குல உயரமான ராட்சதன் மாதிரி தோற்றமளித்த இவர் ஐந்து லட்சம் பேரைக் கொன்று குவித்தவர்.

நீர்யானையின் கல்லீரலிலிந்து மனித மாமிசம் வரை இவர் சாப்பிட்டிருக்கிறார் என்று இவருடன் நெருங்கிப் பழகிய இராணுவ அதிகாரிகள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

1971 முதல் 1979 வரை உகண்டாவை ஆட்சி செய்தார். இவன் பிறந்த ஆண்டு தொடர்பில் சரியான தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை 1924 ஆம ஆண்டு அல்லது 1925 இல் பிறந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு இவரது ஆட்சி பற்றிய விபரங்கள் பல பயங்கரமானவை ஆகும்.

இவர் ஒரு சாதாரன குடும்பத்தில் பிறந்த விவசாயியின் மகன். அவருக்கு ஏறக்குறைய 40 பிள்ளைகளும் 8 மனைவிக்கு மேல் இருந்ததாகவும் தகவல் தெரிவிக்கின்றன.

இவர்தொடக்கக்கல்வி மட்டுமே பயின்றார். 1946 இல் சாதாரன சமையல்காரனாக இராணுவத்தில் சேர்ந்து பின்னர் படிப்படியாக லெப்டினன்ட் ஆக பதவி பெற்றார். 1962 இல் உகண்டா ஆங்கிலேய ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றது. பின்னர் நடந்த சம்பவங்கள் உலக வரலாற்றில் இரத்தத்தில் எழுதப்பட்டன!

வெள்ளையர்களை தனது பல்லுக்கு சிப்பந்திகளாகவும் குடை பிடிக்க வைத்த இடி அமின் தனது ஹீரோ இமேஜ்ஜை கறுப்பின மக்களிடையே தக்க வைத்துக் கொண்டார். அதிகார வெறி இவரை ஆட்டிப்படைத்தது. இராணுவத்தில் சமையல்காரனாக இருந்த இடி அமீனுக்கு முக்கிய பொறுப்புக்களும் பதவி உயர்வும் கொடுத்து நாட்டின் தளபதி பதவிக்கு உயர்தியவர் ஜனாதிபதி "மில்டன் ஓபோட்டை". அவரையே இரத்தம் தெறிக்க இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியினை விட்டு விரட்டினார். ஈவு இரக்கமற்று மில்டன் ஓபோட்டின் ஆதரவாளர்களையும் தன்னை எதிர்க்கும் எல்லா கறுப்பின பிரிவினரையும் கொன்று குவிக்கத் தொடங்கினார்.

1978 இல் உள்நாட்டு கலகங்களும் பொருளாதார பிரச்சினைகளும் உகண்டாவில் தலைவிரித்தாடத் தொடங்கியது. அதனை மூடி மறைக்க அண்டை நாடான தான்சானியாவை வம்புக்கு இழுத்தபோது இடி அமினுக்கு கெட்டகாலம் தொடங்கியது. அந்த நாட்டின் சில பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தார். அதைத் எதிர்த்த ஜனாதிபதியை தன்னுடன் குத்துச் சண்டைபோட தனியே வரும்படி சாவால் விடுத்தார்!

தான்சானியர் மற்றும் உள்நாட்டு படைகள் எதிர்த்து தாக்கின. இதனை சமாளிக்க முடியாமல் இடி அமின் லிபியாவில் தஞ்சம் புகுந்தார். பின்னர் அங்கேயும் எதிர்ப்பு அதிகரிக்கவே சில காலம் ஈராக்கில் வாழ்ந்தார்.

இறுதிக்காலகட்டத்தில் 2003 இல் சவுதி அரேபியாவில் கோமா நிலையில் இருந்து ரத்த அழுத்தத்தாலும் சிறு நீரக கோளாறாலும் பாதிக்கப்பட்டு இறந்தார். அவர் இறந்த சில மணி நேரங்களில் சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் புதைக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

ஒருநாள் இந்த வனத்தில் வேட்டையாடுவதற்கு வந்த அரசனும் அவனது படைகளும் களைப்பின் மிகுதியால் திருமஞ்சனப் பொய்கையில் நீராடிச் செல்ல தண்ணீர் கலங்கி சேறாகிவிட்டது.


அப்போது அங்கே நீராடுவதற்காக வந்த சப்தகன்னியர்களும் பொய்கை நீர் கலங்கியிருத்தலைக் கண்டு சினமுற்று, "இன்று முதல் எங்களைத் தவிர மானிடர்கள் எவரேனும் இந்தப் பொய்கையில் இறங்கி நீராடுவார்களேயானால் அவர்களுடைய நிறமும் உருவமும் மாறிப் போய்விடுமாக" என்று சாபமிட்டுச் சென்றனராம்.

நவகன்னியர் இன்றும் இந்தப் பொய்கைக்கு வந்து நீராடிச் செல்வதால் அவர்களின் சாபம் காரணமாக தங்கள் உருவம் மாறிவிடும் என்ற அச்சத்தால் மானிடர் யாரும் இதில் குளிப்பதில்லையாம்.

யூகி முனிவர் ஆசிரமம்

உரோமரிஷி வனத்திற்குத் தென் பக்கம், கூப்பிடு தூரம் போனால் ஒரு மண் மலை காணப்படும். அந்த மலைச்சரிவை அடுத்துள்ள பள்ளத்தில் இறங்கி சிறிது தூரம் சென்றால் அங்கே அனேக மரம், செடிகள் சூழ்ந்து யூகி முனிவரின் ஆசிரமம் காணப்படும்.

இந்த ஆசிரமம் அமைந்துள்ள வனப்பகுதியில் இன்னுமொரு அதிசயமும் உண்டாம். இந்த வனத்தில் ஓரிடத்தில் புற்று ஒன்று காணப்படுகிறதாம். அந்தப் புற்று தங்கத் துகள் தூவப்பட்டது




போன்ற பிரகாசத்தை உடையதாம். அருகில் சென்றதும் அதிலிருந்து ஏதோ ஓர் ஓங்கார ஒலியும் கேட்குமாம்.

இது எப்படி என்ற ஐயப்பாட்டுக்குப் பின்வரும் கதையைச் சொல்கிறது தலபுராணம்:

முன்னொரு காலத்தில் போக ஞானத்தையே வைராக்கியமாகக் கொண்ட வேத ஞானரிஷி என்பவர் இந்த வனத்தில் கடுமையான தவம் செய்துகொண்டு வரும் காலத்தில் அவர் தவத்தின் முதிர்ச்சியின் காரணமாக அவரைச் சுற்றி புற்று ஒன்று வளர்ந்து அவரது உடலை முழுவதும் மறைத்துக் கொண் டன. முகத்தினது இரண்டு கண்களுக்கு நேராக தெய்வச் செயலாக இரண்டு துவாரங்கள் அமைந்திருந்தன.

இந்நிலையில் சதுரகிரியை ஆண்ட சையாதி மகாராஜன் வேட்டையாடும் பொருட்டு இந்த சௌனக மகா முனிவர் தவஞ்செய்து கொண்டிருக்கும் வனத்திற்கு வந்து மிருகங்களை வேட்டையாடத் தொடங்கினான்.

அப்பொழுது அரசன் மகளாகிய சுகன்னிகை என்பவள், வனத்தைச் சுற்றிப் பார்த்து வரும் பொழுது வனத்தின் நடுவே விசித்திரமான புற்று ஒன்று காணப்படவே, அதன் அருகில் சென்று பார்த்தாள். முன்பக்கத்தில் இரண்டு துவாரத்தினிடையே கண்ணொளி போலத் தோன்றியது.

அதைக் கண்ட சுகன்னிகை தன் அறியாமை குணத்தால் விளையாட்டாக ஒரு குச்சியை எடுத்து ஒளி வீசுகிற அந்தத் துவாரத்தினுள் குத்தினாள். அப்படிக் குத்தியவுடன் புற்றினுள்ளிருக்கிற சௌனக முனிவரின் இரு கண்களிலும் பட்டு ஒளி மங்கியதுடன் தாங்க முடியாத வலியும் உண்டாயிற்று. வலி பொறுக்க முடியாத முனிவர் கோபத்துடன் தன் கண்ணைக் குத்திய அந்த இளவரசிக்குக் கண்கள் தெரியாதிருக்க சபாமளித்தார்.

முனிவரால் ஏற்பட்ட சாபத்தையறிந்த அரசன் அப்புற்றினிடத்துச் சென்று, முனிவரைக் கண்டு, வணங்கி, தன் மகளால் ஏற்பட்ட குற்றத்தை மன்னித்து, அவள் கண்களைத் திறப்பித்து அவளை மணந்து தன்னை ஆட்கொள்ள

## ஆன்மீகம் 13

வேண்டும் என்று வேண்டினான்.

அரசனின் பேச்சுக்களால் மனம் மாறிய சௌனகர் இளவரசியாகிய சுகன்னிகைக்கு கண்கள் தெரியுமாறு அருள்புரிந்ததுடன் அக்கன்னிகையை மணந்து தனது தவத்தைத் தொடர்ந்தார்.

சுகன்னிகை தன் கணவராகிய சௌனக முனிவருக்கு பணி செய்து வரும் காலத்தில் ஒருநாள் அவரது பூசைக்காகத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லும்போது அசுவினி தேவர்கள் அவளைக் கண்டு அவளது கற்பின் திறத்தைச் சோதிக்க எண்ணி அவளிடம், "பெண்ணே நீ யார்? உன் புருசன் யார்? அடர்ந்த இந்த வனத்தில் இருக்கக் காரணம் என்ன? என்று கேட்க, அவளும் தான் சையாதி மகாராஜாவுடைய மகள். என் பெயர் சுகன்னிகை...

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

25

1962 தேர்தல் பிரச்சாரத்துக்காகப் போகிறோம். கும்முடிப்பூண்டி ரயில் நிலையம் பிரதான சாலையில் ஒரு ரயில்வே கேட், அப்போது பிரசித்தம். மூடினால் சீக்கிரம் திறக்க



## அரசகட்டளை!

மாட்டார்கள். சில துரித ரயில்கள் போனபின் தான் திறப்பார்கள்.

அங்கு செம்மலின் வண்டி நின்றது. அந்த காரின் எண் எல்லோருக்கும் தெரியும். கூட்டம் கூடிவிட்டது.

செம்மலின் காருக்கு முன்னே ஒரு கறுப்பு நிற அம்பாசிடர் கார் நின்றிருந்தது. "அது யார் கார்.... காமராஜர் ஐயா கார் மாதிரி தெரியுதே. சபாபதி போய் பார்த்துவா" என்றார் செம்மல்.

சபாபதி போய் பார்த்துவிட்டு விட்டு வந்து "ஆமா அவுங்க தான்" என்றார். உடனே செம்மல் தன் காரைவிட்டு இறங்கிப் போய் அவர்களுக்கு வணக்கம் சொன்னார். ஐயா அவர்கள், கீழிறங்கப் போனதைத் தடுத்தார்.

"இதென்ன தனியே செக்கூரிட்டி இல்லையா...?" என்று கேட்டார்.

அப்போது ஐயா, முதல்வராக இருந்தார்.

"என்னை யார் என்ன செஞ்சுடப் போறாங்க. எனக்குப் பாடிகார்ட் வச்சுக்க? என்றார் ஐயா.

இருவரும் கொஞ்ச நேரம் குசலம் விசாரித்த பின் வந்து அமர்ந்தார்கள். ரயில் போனதும் கார் புறப்பட்டது.

அந்தப் பயணத்தில் நானும் கூட இருந்தேன்.

"ரவீந்திரன்! அடுத்த கதைக்கு ஒரு ஐடியா கிடச்சுட்டது. நம்ம காமராஜர் ஐயாதான் ஹீரோ. ஒரு நாட்டுக்கு உண்மையான அரசன் யாருன்னா கத்தியில்லாமே, தனக்கு சவால் இல்லாமே, யார் மக்கள் மத்தியிலே பவனி வர்றானோ, அவன்தான். இதை வச்சு கதை எழுதணும். நான் அல்ல டைரக்டர். என் அண்ணனை செய்யச் சொல்லப்போறேன்" என்றார்.

அதுதான் அரசக்கட்டளை! (திரைப்படம்)



அந்தப் பயணத்திலிருந்து திரும்பும் போது, பெங்களூரில் இரண்டு நாள் தங்க முடிவெடுத்தார் செம்மல். அதனால் மைசூரை நோக்கி வண்டி போய்க்கொண்டிருந்தது.

அங்கும் ஒரு ரயில்வே கேட். வண்டி நிறுத்தப்பட்டது.

ஒரு கிராமம் தான். குழந்தைகள், சிறுவர் எம்.ஜி.ஆர் என்று குரல் கொடுத்து சூழ்ந்து கொண்டனர்.

தெருவோரத்தில் ஒரு குடிசை.

அங்கிருந்து ஒரு மூதாட்டி வந்து, செம்மலை தன் குடிசைக்கு அழைத்தார்.

செம்மல் இறங்கிச் சென்றார். நானும் சபாபதியும் கூடச் சென்றோம்.

அந்த பெரியம்மா "ஐயா நாங்க ஏழை. கூப்பிட்டோம் வந்துட்டிங்க. எங்க பாக்யம். என்ன புண்ணியம் செஞ்சதோ இந்த குடிசை. உங்க கால் படறதுக்கு. சூடா பால் இருக்கு. கொஞ்சம் சாப்பிடுங்க" என்று கொண்டு வந்து கொடுத்தார்.

சபாபதி சூடாற்றித் தருவதாகச் சொல்லி ஆற்றினார். கொஞ்சம் அவரும் செம்மலுக்குத் தெரியாமல் தன் வாயில் ஊற்றிக் கொண்டார். மீதியைக் கொடுத்ததும் கொஞ்சம் குடித்துவிட்டு என்னிடம் கொடுக்க நானும் குடித்தேன்.

கேட் திறந்துவிட்டதாக டிரைவர் ராமசாமி வந்து சொல்ல புறப்பட்டு விட்டோம்.

கார் போய்க்கொண்டிருந்தது. "என்ன சபாபதி எனக்குத் தெரியாமல் பால் குடிச்சியே, அவ்வளவு பசியா" என்று கேட்டார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு அட்டைகள்; அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

**தனியார் பேருந்துகளில் கட்டணமாக பணம் செலுத்துவதற்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டைகள் வழங்கும் நடைமுறையை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க நாடு முழுவதும் தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு அட்டையை உபயோகிப்பதற்கு அனுமதிகோரி முன்வைத்த பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பேருந்து உரிமையாளர் சங்கங்கள் உள்ளிட்ட ஏனைய பேருந்து சங்கங்களின் விருப்பத்திற்கமையவே அமைச்சர் இச் சேவையைநடைமுறைப்படுத்த விருப்பம் கொண்டார்.

இவ்வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள தயட்ட கிருள கண்காட்சியுடன் இணைந்ததாக நாடு முழுவதுமுள்ள தனியார் பேருந்துகளுக்கான முற்கொடுப்பனவு அட்டைகளை அமைச்சர் சி.பி. ரத்நாயக்க அறிமுகம் செய்து வைக்க தீர்மானித்துள்ளார்.

மொபிட்டல் மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுடன் இணைத்து அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ள இந்த முற்கொடுப்பனவு அட்டைகளுக்காக வெகு விரைவில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

தனியார் பேருந்து சேவையினூடாக நாளாந்தம் 200 மில்லியன் ரூபா வரையில் வருமானமாக கிடைக்கக் கூடும். இருப்பினும் பேருந்து நடத்துநரின் முறைகேடான செயற்பாடுகள் மற்றும் கப்பம் செலுத்துதல் போன்ற அசம்பாவிதங்களால் நாளாந்தம் 10 மில்லியன் ரூபா முதல் 20 மில்லியன் ரூபா வரையில் இழக்கப்படுகிறது.

அதேநேரம் பயணிகளுக்கான மிகுதி பணத்தை பேருந்து நடத்துநர்கள் வழங்காமையும் பாரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. இவையனைத்துக்குமான தீர்வாகவே முற்கொடுப்பனவு அட்டைகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

நாடு முழுவதும் 20 ஆயிரம் தனியார் பேருந்துகள் சேவையிலுள்ளன. இவற்றுள் சுமார் 3 ஆயிரத்து 500 பேருந்துகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழும் மிகுதி 17 ஆயிரம் பேருந்துகள் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழும் இயங்குகின்றன.

தனியார் பேருந்துகளுக்குச் சொந்தமான சுமார் 18 ஆயிரம் பேருந்து உரிமையாளர்கள் உள்ளதுடன் நாளாந்தம் 3.2 மில்லியன் பயணிகள் பேருந்துகளில் பயணம் செய்வதாகவும் தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது. (அ)

# இலங்கை பணிப்பெண் குவைத்தில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

குவைத் நாட்டில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குவைத் நாட்டின் ஜிபிலி அல்சுவாக் பிரதேசத்தில் தங்கியிருந்த வீட்டில் மின் விசிறியில் தொங்கிய நிலையில் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. குறித்த பெண் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# திடீர் விபத்துக்களால் 500 சிறுவர்கள் பலி!

(கொழும்பு)

திடீர் விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் 500 சிறுவர்கள் வரை உயிரிழந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் திடீர் விபத்துக்கள் காரணமாக சுமார் 18 ஆயிரம் சிறுவர்கள் அங்கவீனமடைகின்றனர். திடீர் விபத்துக்கள் குறித்து போதிய புரிதல் இல்லாமையே இதற்கான காரணமாகும்.

இந்த திடீர் விபத்துக்களில் நான்கில் மூன்றுக்கு மேற்பட்ட விபத்துக்களை தவிர்த்து கொள்ள முடியும்.

வீடுகளில் மற்றும் பாடசாலை விளையாட்டுக்களின் போது சிறுவர்கள் இவ்வாறான திடீர் விபத்துக்களை சந்திப்பதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)




மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் வருட ஆரம்பத்தில் வறிய மாணவர்களை தேர்ந்தெடுத்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி இவ்வருடம் பொம்மைவெளி கிராமத்திலிருந்து 150 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்ட போது....

# கச்சதீவில் இந்தியர்கள் மீன்பிடிக்க முடியாது

## இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

(சென்னை)

கச்சதீவு இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட இடமாகும். கச்சதீவு முடிந்த விடயம் என்ற அடிப்படையில் அங்கு இந்திய மீனவர்களுக்கு பாரம்பரியமாக மீன்பிடி உரிமை இல்லை என்று இந்திய மத்திய அரசாங்கம் சென்னை மேல்நீதிமன்றத்தில் இதனை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கச்சதீவை மீண்டும் இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு எதிர்மனுவை தாக்கல் செய்த மத்திய அரசாங்கம் இதனை சத்தி யக்கடதாசி மூலம் தெரிவித் துள்ளது.

1974ஆம் ஆண்டு இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கையின் படி கச்சதீவில் படகுகளில் மீன்பிடிக்க முடியாது.

கப்பல்களில் மீன்பிடிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 1976 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி கப்பல்களில் சென்று வரும் உரிமையும் இல்லாமல் போனது என்று மத்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இதற்கான வழக்கு விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)

# ஜனாதிபதி என்மீது அன்பு வைத்திருக்கின்றார்- மேர்வின்

ஜனாதிபதி என்மீது அன்பு வைத்திருக்கின்றார் என பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். களனியில நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

சிலர் ஜனாதிபதி தம்மை வெறுப்பதாக கருத்திக் கொண்டுள்ளதாகவும் உண்மையல்அவ்வாறான ஓர்நிலைமை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மட்டுமன்றி ஒட்டு மொத்த டி.ஏ. ராஜபக்ஷ குடும்பத்தாரும் தம்மீது நேசம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தம்மீது கோபங் கொண்டுள்ளதாக சிலர் பிரசாரம் செய்கின்றனர் எனவும் அதில் உண்மையில்லை சிறு பிராயம் முதலே டி.ஏ. ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமானவராக தாம் திகழ்ந்து வருவதாகக் குறிப் பிட்டுள்ளார். (அ-2)

# மீனவர் பிரச்சினை குறித்து மாலைதீவுடன் பேச்சுவார்த்தை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

அரபிக் கடலுக்குள் ஆழ்கடல்மீன்பிடிப்புக்காக செல்லும் இலங்கை மீனவர்கள் இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினரால் கைதாவதை தடுக்கும் நோக்கில் மாலைதீவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என கடற்றொழில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்தடைந்த மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமினுடனும் இது தொடர்பாக பேசியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

டூனா என்றழைக்கப்படும் சூரைமீன் வேட்டைக்காக அரபிக் கடலுக்குச் செல்லும் இலங்கை ஆழ்கடல் மீனவர்கள் **innocent passage** என்ற சுதந்திர கடல் நடமாட்ட பகுதியூடாக செல்கின்றனர்.

இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையேயுள்ள இந்த **innocent passage** வழியாக செல்லும் இலங்கை மீனவர்கள் இந்திய கடலஎல்லைக்குள்ளாக செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனாலேயே அவர்கள் இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினரால் கைதாகிறார்கள்.

எனவே **innocent passage** வழியாக செல்லும் போது இந்திய கடல் பகுதியை பயன்படுத்தாது மாலைதீவு கடல் பகுதியை பயன்படுத்திச் செல்லும் போது கைதாக வாய்ப்பு இல்லாமல் போகும் என்பதாலேயே மாலைதீவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செயது கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை மீனவர்கள் அரபிக் கடலுக்குள் சென்று ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு நாடு திரும்பும் வேளையிலேயே கைதாகிறார்கள். பிடித்து வரும் பெருந்தொகையான மீனும் பறிமுதல் செய்யப்படுகிறது.

எனினும், இந்திய கடல் எல்லைக்குள் கைதாகும் இலங்கை மீனவர்கள் அனைவரும் **innocent passage** ஊடாக செல்பவர்கள் அல்ல. அத்துமீறி சென்று மீன்பிடிப்பவர்கள் தான் என்றும் அமைச்சர் தெரிவித்ததுடன் இந்திய கடல் எல்லைக்குள் செல்வதை இலங்கை மீனவர்கள் தவிர்த்துக் கொளளுமாறும் கேட்டுக் கொண்டார். (அ-2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுகின்றது

## சர்வதேசம் குறித்து ஜனாதிபதி உரை



கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**(கொழும்பு) தற்போது நாட்டிற்கு சமாதான சூழல் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டிருந்தும் கூட சர்வதேச நாடுகள் இலங்கையின் மீது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களை சுமத்திவருகின்றன. மேலும் சர்வதேச தலைவர்கள் இதனை ஆராய்வதற்கு இலங்கைக்கு வருவதும் செல்வது மாகவேயுள்ளனர். இவர்களுடைய செயற்பாடானது ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுத கதைக்கு ஒப்பானது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் யுத்தத்திற்கு பின்பு இங்கு வந்ததும் கிடையாது. இலங்கை தமிழர்களின் தற்போதைய உண்மை நிலைமைகளை பற்றி ஆராய்ந்ததும் கிடையாது. ஆனால், இலங்கைக்கு எதிராக் போலி குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர். இதனை எதிர்கால சந்ததியினரான தற்போதைய சிறுவர்கள் புரிந்து கொண்டு தேசத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாக வாழ வேண்டும்.

தற்போது வடகிழக்கிற்கு எவ்வித அச்சமுமின்றி செல்லலாம். சிறுவர்களுக்கு சுதந்திரமாக பாடசாலைகளுக்கு சென்று கல்வி பயில முடியும்.

ஆனால், யுத்தம் நிலவிய காலப் பகுதியில் மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்லும் போது தனது புத்தகப்பையை பரிசோதனை செய்த பின்பே செல்ல வேண்டும்.

அதேபோன்று பேருந்து வண்டிகளில் பிரயாணம் மேற்கொள்ளும் போதும் அவ்வாறான நிலைமையே காணப் பட்டது.

ஆனால் கல்வி நிலைமை மிகவும உயர்நிலையில் காணப்படுகிறது. இவ்வருடம் வடமாகாணத்திலிருந்தே அதிகமானவர்கள் பல்கலைக்கழகத்திற்கு நுழைந்துள்ளனர். அதேபோன்று வடகிழக்கில் அபிவிருத்தி செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சிறுவர்கள் தேசத்தின் மீது பற்றுள்ளவராக இருக்க வேண்டும். தனது பெற்றோர், ஆசிரியர்கள் மீது அன்பு செலுத்துவது போன்று நாட்டின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். இப்பாடசாலைக்கு சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் பெயரே சூட்டப்பட்டுள்ளது.

சேர்.பொன். இராமநாதன் யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பில் கல்வி பயின்று தனது உயர்கல்விக்காக இந்தியாவிற்கும் சென்றார். இருப்பினும் அவர் இந்தியாவின் மீது அன்பு செலுத்தினாரா. ஒரு போதும் கிடையாது. அவர இலங்கை திருநாட்டின் மீதே அதிகம் பற்றுக் கொண்டவராக காணப்பட்டார் பௌத்தர்களில் போயா தினத்தை விடுமுறை தினமாக மாற்றியவரும் அவரே.

எனவே, சேர்.பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் போன்று தேசப் பற்று மிக்கவர்களாக தற்போதைய சிறுவர்கள் வளர வேண்டும்.

வடமாகாண கல்வியும் குறுகிய காலத்தினுள் நல்ல நிலைமைக்கு வந்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் மீது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. சர்வதேச நாட்டு தலைவர்கள் இதனை ஆராய்வதற்கு இலங்கைக்கு வருகை தருவதும் செல்வதுமாகவே உள்ளனர்.

குறித்த சர்வதேச நாடடு தலைவர்களின் செயற்பாடானது ஆடு நனைகிறது என்று கண்ணீர் சிந்தும் ஒநாயின் செயற்பாட்டிற்கு ஒப்பானது. இதனை தமிழ் மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

தனது சாதி, மதத்தின் மீது பற்று வைப்பதை போன்று தனது நாட்டின் மீது அன்பு செலுத்த வேண்டும். நாங்கள் பிறந்த இப்பூமியை சீரழிக்காமல் பாதுகாக்க வேண்டியது தற்போதைய சிறுவர்களின் பொறுப்பாகும்.

அத்துடன், இந்து மதமானது புராதன மதங்களுள் ஒன்று. எனவே, குறித்த மதத்தினையும், கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டும். இவவுலகில் திருட முடியாதது கல்வியாகும்.

அதேபோன்று கல்வி என் பது இரண்டு கண்களை போன்றது. அதனை பாதுகாக்க வேண்டுமென திருக்குறளிலுள்ள இரண்டு குறளை எடுத்து காட்டிய ஜனாதிபதி, இந்நாட்டின் எதிர்கால தலைவர்கள் என்ற வகையில் சிறப்பான முறையில் கல்வி கற்று தேசத்தின் மீது பற்றுள்ளவராக வாழ வேண்டும் என்றார். (அ-2)

## மடிக்கணனி திருட்டு அதிகரித்துள்ளது

(கொழும்பு)

திட்டமிட்ட வகையில் மடிக் கணனிகளை கொள்ளையிடும் சம்பவங்கள் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் மட்டும் 38 மடிக் கணனிகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம் மாதத்தில் கடந்த 20 நாட்களில் மாத்திரம் 36 மடிக் கணனிகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

புகையிரதம், பேருந்துகள் மற்றும் வீடுகளில் புகுந்து கொள்ளையிடும் குழுவினர் இவ்வாறு மடிக் கணனிகளை கொள்ளையிட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால் பொது போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கும் பயணிகள் மடிக் கணனிகளை தம்வசம் கொண்டு சென்றால் அது குறித்து அவதானத்துடன் இருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

## குர்ஷித்தும் றிசாத்தும் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் இலங்கையின் கைத்தொழில்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனும் புதுடில்லியில் சந்தித்துள்ளனர்.

இச் சந்திப்பு கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது. இதன்போது இருவரும் வர்த்த கம் உட்பட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முதலீடுகள் குறித்து இதன்போது பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



யாழ்.வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புதிய மாணவர்களும் விருந்தினர்களும் அழைத்து வரப்படுவதனையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் புதிய மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் இருப்பதையும் படங்களில் காணலாம்.

## 40 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

திரைச் சீலைகளை இறக்குமதி செய்வதாக போலி ஆவணங்களை சமர்ப்பித்து சுமார் 11 கோடியே 20 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றை 20 அடி நீளமான கொள்கலன் ஒன்றிலிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

புறக்கோட்டையில் கெய்ஸர் வீதியில் ஒரு போலியான விலாசம் குறிப்பிடப்பட்டு 40 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.


சுங்க திணைக்களத்தின் வருவாய்த்துறை செயலணியினர் நேற்று முன்தினம் காலை கொள்கலனை திறந்த போது டுபாயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 40 இலட்சம் சிகரெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன. லியோ மொனோ (LEO MONO) கப்பலில் டுபாயின் ஜெபல்எலி துறை முகத்திலிருந்து இலங்கைக்கு கடந்த 7 ஆம் திகதி கொண்டுவரப் பட்ட கொள்கலனினுள் திரைச் சீலைகளுக்குப் பதிலாக சிகரெட்டுகள் இருப்பதாக இரகசிய தகவல் சுங்க திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது.

இதனையடுத்து கொள்கலனை சுங்க திணைக்களத்தின் ஒறுகொடவத்த முனையத்துக்கு கொண்டு வந்தனர்.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு சிகரெட்டுகள் இறக்குமதி செய்த நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக சுங்க பேச்சாளர் தெரிவித்தார். (அ-2)

## பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டும்

### ஆணையாளர் கோரிக்கை



பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கூடுதல் அதிகாரங்கள் தேவைப்படுவதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் ஆணையாளர் சேனக வெல்கம்பாய தெரிவித்துள்ளார்.

18ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போது மானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸாரால் பொது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கான சட்ட அதிகாரம் வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

17ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டு 18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ் ஆணைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போதைய சட்டங்களின் மூலம் இவ் ஆணைக்குழுவிற்கு போதியளவு அதிகாரங்கள் எதுவும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் பொதுமகன் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என நிரூபிக்கப்பட்டாலும் அவருக்கு நட்டஈடு வழங்க இவ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நட்டஈடு வழங்குவதற்கு தற்போதைய சட்டத்தில் இடமில்லை எனவும், நட்டஈடு வழங்கப்படக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். உத்தேச சட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இது அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தும் அதிகாரம் மட்டுமே பொலிஸ் ஆணைக்குழுவிற்கு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுகள் மேலும் வலுவடைகின்றன !

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் (HRW) 2014 இல் வெளியிட்ட அறிக்கையிலிருந்து....




இலங்கையில் 2009 இல் முடிவடைந்த, சுமார் மூன்று தசாப்த கால நீண்ட உள்நாட்டு யுத்தத்தின் போது புரியப்பட்ட பாரதூமான மனித உரிமைத் துஷபிரயோகங்கள்மீதாக கவனம் செலுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2013 இல் ஒரு சிறிய முன்னேற்றத்தையே ஏற்படுத்தினார்.

இலங்கை, அதன் சொந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (SLRC) பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கும் மற்றும் உள்நாட்டு யுத்தத்தில் இரு தரப்புகளாலும் புரியப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படும் யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்குமாக இலங்கையைப் பல வருடங்களாக அது கோரியதையும் குறிப்பிட்டு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை HRC, மார்ச்சில் இரண்டாவது தீர்மானத்தை நிறைவேற்றியது. கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை தான் அமுல்படுத்துவதாக அரசாங்கம் தெரிவித்தது, ஆயினும் அது தெரிவிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது சிரமமானதாக இருந்ததுடன் அதன் பொறுப்புக் கூறல் நம்பகத் தன்மை அற்றதாக இருந்தது.

இந்த வருடம், இந்து மற்றும் முஸ்லிம் மதத்தினருக்கு எதிராக தீவிரவாத பௌத்த குழுக்களினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டது. 2012 இல் முக்கியமானதொரு வழக்கில் அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானம் மேற்கொண்ட பின்னர் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க அவர்களுக்கு எதிராக ராஜபக்ச அரசாங்கம் அரசியல் குற்றச்சாட்டை உருவாக்கியதன் பின்னர் நீதித்துறையின் சுயாதீனமும் கேள்விக்கு உள்ளாகியது. செப்டெம்பரில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. அச்சுறுத்தல், வன்முறை மற்றும் முறையற்ற இராணுவத் தலையீடு தொடர்பான பல சம்பவங்கள் பற்றி சுயாதீனமான கண்காணிப்பாளர்கள் அறிவித்தனர். உள்நாட்டு யுத்தத்தின் போது பெரும் பாலான மோதல்களுக்கான களமாக இருந்த தமிழ் இனத்தவர்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட பிரதேசமான வட மாகாணசபையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு (TNA) பாரிய பெரும்பான்மையில் வெற்றிபெற்றது.

செப்டெம்பர் அளவில், உள்நாட்டு யுத்தத்தின் இறுதியில் தோற்கடிக்கப்பட்டு, பிடித்து வைத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனக் கணிப்பிடப்பட்ட 12,000 பேர்களில் 230 பேர்களை அரசாங்கம் "புனர்வாழ்வுக்காக" தடுத்து வைத்திருந்தது.

**பொறுப்புக்கூறுதல்:**

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு பல வருடங்களாக இலங்கை தவறி வந்தமை, மார்ச்சில் மனித உரிமைகள் பேரவை, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைககள் சட்டங்களின் மீறல்களுக்குரிய சுயாதீனமான மற்றும் நம்பத் தகுந்த புலன் விசாரணையை மேற்கொள்ளக் கோரி இலங்கை மீது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உந்தியது. அத்தோடு, இத் தீர்மானமானது மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் மாத அமர்வுகளின் போது இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகள் மீதானதொரு வாய்மொழி மூலமான இற்றைப்படுத்தலை அளிப்பதற்கும், மற்றும் மார்ச் 2014 அமர்வில் ஓர் எழுத்து மூலமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களைக் கோரியது.

மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை அடுத்து, ஒரு சில யுத்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான புலன் விசாரணைகள் உட்பட, கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுல்படுத்தல்கள் தொடர்பாக பல இற்றைப்படுத்தல்களை அரசாங்கம் வெளியிட்டது. அதன் அறிவித்தல்கள் பலவற்றை அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின்மை காரணமாக உறுதிப்படுத்துவது கடினமாக இருந்ததுடன், அவை உண்மையாக இருந்தாலும் கூட, முக்கியமான அம்சங்களில், தீர்மானத்தில் கோரப்பட்ட நடவடிக்கைகளைளுக்கு மிகவும் குறைந்த தன்மை கொண்டவையாகவே அவை காணப்பட்டன.

2012 இல் ஸ்தாபிக்கப்பட்ட விசேட இராணுவ விசாரணை நீதிமன்றங்கள் கணிசமான சாட்சியங்கள் இருந்த போதிலும் அவற்றுக்கு முரணாக, எந்தவொரு யுத்தக் குற்றச்சாட்டு சட்டங்ளில் இருந்தும் இராணுவத்தை முழுமையாக பழி விலக்கியது. ஜனவரி 2006 இல், திருகோணமலையில் ஐந்து தமிழ் இளைஞர்களின் படுகொலையின் புலன்விசாரணையின் ஒரு பகுதியாக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் 12 உறுப்பினர்களை அரசாங்கம் கைது செய்த வேளையில், அது சம்பந்தப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கைது செய்ய அது தவறியது. பலவந்தமான காணாமற் போதல்கள் பற்றி கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆஜணக்குழுவின் கரிசனைகளுக்கு பதிலிறுப்பதற்கு, ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆணையுடனும் மற்றும் அதன் கண்டறிதல்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்துமா என்ற தெளிவின்மையோடும் அமைந்தாக, அண்மையில் ஒரு விசேட ஆணைக்குழுவை அரசாங்கம் ஸ்தாபித்தது.

உயர் ஆணையாளர், நவநீதம பிள்ளை அவர்கள் ஆகஸ்டில் இலங்கைக்கு விஜயம் செய்தார். மனித உரிமைகள் பேரவைக்கான அவரது செப்டெம்பர் மாதத்து வாய்மொழி மூலமான அறிக்கை, போருக்குப் பின்னதான பொறுப்புக் கூறல் தொடர்பில் அரசாங்கத்தின் தவறுதல்கள் மீதானதொரு கடுமையான விமர்சனமாக இருந்தது. யுத்தக் குற்றங்களின் "குற்றச்சாட்டுகள் மீது சுயாதீனமான மற்றும் நம்பத் தகுந்ததான புலன்விசாரணைக்கு" அரசாங்கத் தரப்பிலிருந்தான முயற்சிகளுக்கு எந்தவொரு சான்றையும் தான் காணவில்லையெனவும், அரசாங்கம் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பலவற்றை அமுல்படுத்த தவறிவிட்டது எனவும் நவநீதம்பிள்ளை கூறினார். கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முக்கிய பரிந்துரைகளிலொன்றான- பாதுகாப்பு அமைச்சிலிருந்து பொலிஸ் துறையை வேறாக்கும் செயற்பாடானது, முன்னாள் இராணுவ அதிகாரியின் கட்டளையின் கீழ் அது கொண்டுவரப பட்டதன் மூலமாக இன்னமும் பூர்த்தி செய்யப்படாது உள்ளது என நவநீதம்பிள்ளை குறிப்பிட்டார்.

**சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவு:**

காவலிலுள்ள ஆட்கள் பாதுகாப்பு படைகளினால் சித்திரவதை மற்றும் ஏனைய இழிவான நடத்துதல்களுக்கு உள்ளாகுதல் என்பது ஆயுத மோதலின் போதும் மற்றும் அதன் பின்னரும் காணப்பட்ட பரவலானதொரு பிரச்சினையாக இருந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு பாலியல் வல்லுறவும் மற்றும் பாலியல் வன்முறைகளும் பரவலான சித்திரவதைகளின் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது என்பதற்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் பெப்ரெவரியில் புதிய சான்றுகளை வெளியிட்டது. த.வி.பு இயக்கத்துடனான ஈடுபாடு குறித்த "ஒப்புதல் வாக்குமூலத்தைப்" பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் த.வி.பு இயக்கத்துடனான ஈடுபாட்டினை அதையரியப்படுத்துவதற்கும் ஏனைய தமிழ் மக்களிடையே அச்சத்தை ஊட்டுவதற்காகவும் என சித்திரவதைகள் பயன்படுத்தப்பட்டன.

இந்தக் கண்டறிதல்களை அரசாங்கம் நிராகரித்ததுடன், அவை தங்களின் வெளிநாட்டுத் தஞ்சக் கோரிக்கைகளுக்கு வலுவூட்டுவதற்காக தனிப்பட்டவர்களால் இட்டுக்கட்டப்பட்டவை எனவும் தெரிவித்தது. அறிவிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங்கள் மீது அரசாங்கத்தின் ஏதேனும் புலன்விசாரணைகள் பற்றி மனித உரிமைகள் கண்காணிப்பகம் எதுவும் அறிந்திருக்கவில்லை.

த.வி.பு உடன் தொடர்புபட்ட தமிழர்கள், மீள்திரும்புதலின் போது சித்திரவதைக்கு ஆளாகும், இடரேது நிலையிலுள்ளனர் எனக் கண்ட பின்னர் பல ஐரோப்பிய நாடுகள் அதன் பின்னர் அவர்களைத் சொந்த நாட்டிற்கு நாடு கடத்துவதை இடைநிறுத் தியுள்ளன. ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான சர்வதேச ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்) அகதிக் கோரிக்கையை மதிப்பிடுதல் மீதான அதன் வழிகாட்டல்களை டிசம்பர் 2012 இல் திருத்தியுள்ளதுடன் த.வி.பு உடன் ஏதேனும் தொடர்புகளைக் கொண்டுள்ள நபர்கள், மீள்திரும்பலின் போது இடரேது நிலையிலுள்ளவர்களாக கருதப்படல் வேண்டுமெனவும் பரிந்துரைத்திருக்கின்றது.

**எதேச்சாதிகாரமான தடுத்து வைத்தல் மற்றும் பலவந்தமான காணாமற் போதல்கள்:**

இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டம் காவலிலுள்ள சந்தேகத்திற்குரிய நபர்களுக்கு எதிராக பொலிஸாருக்கு பரந்ததொரு அதிகாரத்தை அளிக்கின்றதுடன், பாதுகாப்பு சம்பந்தமாக சந்தேகத்திற் குரியவர்களை விசாரணைகளின்றி நீண்ட காலத்திற்கு தடுத்து வைப்பதை நியாயப்படுத்துவதற்கு அதிகாரிகளால் இச்சட்டம் மிகவும் சாதாரணமாக முன்னிடப்படுகின்றது....

(தொடரும்)

இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்களுக்கான

# இரண்டாம்மொழி தேர்ச்சிக் காலம் இரண்டு வருடங்களால் அதிகரிப்பு

**இரண்டாம் மொழித் தேர்ச்சியை நிரூபிப்பதற்காக அரச துறை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காலம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

இதற்கிணங்க இரண்டாம் மொழித் தேர்ச்சியை நிரூபிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ஐந்து வருடகாலம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

அரச கரும மொழி கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தும் வகையில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுக்கமைய சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் மற்றும் எதிர்காலத்தில் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு இந்த இரண்டாம் மொழித் தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அரச கரும மொழி கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இதற்கிணங்க 2007-2011 காலத்திற்குள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் அரச துறையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களின் இரண்டாம் மொழி தேர்ச்சிக்கான காலம் ஐந்து வருடத்திலிருந்து மேலும் இரண்டு வருடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அரச கரும மொழி திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்தும் எழுத்து மூல பரீட்சையொன்றுக்கும் மேலும் ஒரு வாய்மூல பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவர். இதன் மூலம் தமது இரண்டாம் மொழி தேர்ச்சியை நிரூபிக்க முடியாதவர்களின் பதவியுயர்வுகள் உட்பட்ட சலுகைகளை இழக்க நேரிடும் எனவும் அமைச்சு தெரிவித்தது.

இச்சுற்றறிக்கைக்கிணங்க 161 சிங்கள நிர்வாக மொழி பிரதேசங்கள் மற்றும் 62 தமிழ் மொழி நிர்வாக பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் இப் பிரதேசங்களில் மொழித் தேர்ச்சியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் ஒரு சலுகையாக க.பொ.த. சாதாரண பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களத்தை இரண்டாம் மொழியாக எழுதி சித்தியடைந்தவர்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய அவசியமில்லை.

வாய்மூல பரீட்சைக்கு மட்டுமே அவர்கள் தோற்றினால் போதுமானது எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தவிர மேலும் சில சிபாரிசுகள் மேற்படி சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜி-77 நாடுகளின் தலைமை பதவி இலங்கைக்கு

ஜி-77 நாடுகளின் குழுவின் வியன்னா அலுவலகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான தலைமை பதவி இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இதனையடுத்து புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள வியன்னாவிலுள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதியான ஏ.எல்.ஏ.அஸீஸ் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தப் பதவிக்கு தான் தெரிவானதையிட்டு இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடையும் என ஏ.எல்.ஏ. அஸீஸ் இதன்போது தெரிவித்தார்.

இவருக்கு முன்னர் வியன்னாவிற்கான சூடானின் நிரந்தர பிரதிநிதி மஃமூத் எலாமின் இந்த குழுவின் தலைவராக பதவி வகித்தார். இந்த குழு 1964ஆம் ஆண்டு 77 நாடுகளைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தில் நிதிப்படுத்தப்படும் இந்த குழுவின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்பாடுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கசினோ நிறுவனம் அரசுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் புதிய கசினோ சூதாட்ட நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில்லை என அறிவித்துள்ளது.

எனினும் புதிய அனுமதிப் பத்திரத்தை பெறுவது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கிறவுண் கசினோ நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிறவுண் கசினோ நிறுவனம் அவுஸ்திரேலியா பிரஜையான பிரபல கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கரின் நிறுவனமாகும்.

எவ்வாறாயினும் ஜேம்ஸ் பாக்கரின் இலங்கை பங்காளி எனக் கூறப்படும் ரவி விஜேரத்னவிடம் ஏற்கனவே கசினோ சூதாட்ட அனுமதிப் பத்திரம் இருப்பதால், அதனை பயன்படுத்தி பாக்கரின் நிறுவனம் கசினோவை இலங்கையில் ஆரம்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கூட்டு வர்த்தகமாக அல்லாமல் தனித்து ஆரம்பிப்பது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கிறவுண் நிறுவனத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இந் நிலையில், அரசாங்கம் கசினோவுக்கு புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்காது எனவும் முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை புதிய கட்டமைப்புக்குள் கொண்டு வரும் எனவும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# இலங்கை பெண்கள் மூவருக்கு சவுதியில் தண்டனை விதிப்பு

## ஒப்பந்த காலம் முடியாமல் நாடு திரும்ப முனைந்தனராம்

ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்னதாக நாடு திரும்ப முயற்சித்த இலங்கைப் பணிப்பெண்கள் மூவருக்கு சவுதி அரேபிய நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

இவர்கள் இரண்டாண்டுகள் ஒப்பந்த காலம் நிறைவடைவதற்கு முன்னதாக நாடு திரும்ப முயற்சித்துள்ளனர்.


ஒப்பந்த காலம் நிறைவடைவதற்கு முன்னதாக நாடு திரும்ப வேண்டுமென்றால் தலா ஐந்து இலட்ச ரூபா பணம் செலுத்த வேணடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணத்தை செலுத்த முடியாத காரணத்தினால் பெண்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்னதாக நாடு திரும்ப முடியாத வகையில் சவுதி அரேபிய அரசாங்கம் சட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவசர தேவைகளுக்காக கூட பெண்கள் இரண்டாண்டுகள் ஒப்பந்த காலத்திற்கு முன்னதாக நாடு திரும்ப முடியாது என குறிப்பிட்டுள்ளது.

எனவே, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு முன்னர் பெண்கள் நிதானமாக யோசித்து முடிவு எடுக்க வேண்டுமென அறிவித்துள்ளது. (அ-2)



வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாக ஏசியன் பவுண்டேசன் நிறுவனப் பணிப்பாளர் டேவிட் ஆனோல்ட் குழுவினருடன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துரையாடிய போது... (படம். என்.குமார்)

# சஞ்ஜீவ மீதான விசாரணை தற்காலிக இடை நிறுத்தம்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டாரவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த வழக்கை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சஞ்ஜீவ பண்டார, மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விசாரணை மனுவை ஆராய்ந்த நீதிபதி லலித் ஜயசூரிய நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையிலும் பொது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் சட்டவிரோத பேரணியை ஏற்பாடு செய்ததாக குற்றம் சுமத்தி சஞ்ஜீவ பண்டார கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கில் பிணை வழங்க நீதிமன்றம் சில நிபந்தனைகளை விதித்தது. மாணவர் அமைப்பு அல்லது வேறு அமைப்புகளில் நேரடியான உறுப்பினராக இருக்கவும் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையவும் நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

இந்த நிபந்தனைகளால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக கூறி சஞ்ஜீவ பண்டார, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணை மனுவை தாக்கல் செய்திருந்தார். இதனடிப்படையில் மனுவின் விசாரணை முடியும் வரை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

மேல் நீதிமன்றம் இந்த விசாரணை மனுவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்து கொள்ள உள்ளது. (அ-2)

# இலங்கையில் ஆயிரத்து 200 இந்திய, சீன பணியாளர்கள்


இலங்கையில் சுமார் 12 ஆயிரம் சீன மற்றும் இந்தியப் பணியாளர்கள் தொழில் செய்யும் அனுமதியை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 600 சீனர்களும் 6 ஆயிரத்து 297 இந்தியர்களும் இலங்கையில் பணியாற்றினர். இந்த பணியாளர்கள் தொழில் நுட்ப மற்றும் ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை வழங்கி வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முதலீடுகள் அதிகரிக்கும் போது அந்தந்த நாடுகளின் பணியாளர்களும் இலங்கையில் பணியாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே பெருமளவான சீன மற்றும் இந்தியப் பணியாளர்கள் இலங்கையில் இருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் 2006 தொடக்கம் 2011 வரை 32 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.வலி.தெற்கு பிரதேச சபையின் (சுன்னாகம்) உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் நிற்பதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கணனிமயப்படுத்தப்பட்ட ஆதனவரிப் பகுதியை நாடாவெட்டி கட்டடத்தினைத் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:. எஸ்.ஆர்.கரன்)

# குடும்ப வேளாண்மையும் உழவர் பெருவிழாவும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 44-I



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2014 ஆம் ஆண்டினை உலக குடும்ப வேளாண்மை ஆண்டாக (International Family Farming year) பிரகடனம் செய்துள்ளது. இதுவே இக்கட்டுரைக்கு கருவாக அமைந்துள்ளது. உலக மக்களுக்கான உணவினை உற்பத்தி செய்வதில் பல திட்டங்களை வரைந்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலக உணவு தாபனத்தினூடாக அவற்றினை சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதனை நாமும் எங்கள் தேசத்தில் குடும்ப வேளாண்மையை சிறப்பாக விரைந்து திட்டங்களை தீட்டி ஏற்கனவே தீட்டப்பட்ட திட்டங்களை செவ்வனே நடைமுறைப்படுத்தியும் செயன் முறையில் செய்தும் காட்ட வேண்டும். பொதுவாகவே இவ்வாறு திட்டங்களை வரையும் போது இவரெல்லாம் "வாய்ச் சொல்லில் வீரரடி..." என்ற வாசகம் தான் அனைவரினதும் எண்ணத்தில் எழும். மாறாக தீட்டும் திட்டங்களை விரைந்து அமுலாக்கி அனைவரினதும் நம்பிக்கையைப் பெறும் பட்சத்தில் பின்னர் செய்யும் திட்டங்களுக்கு வரவேற்பிருக்கும்.

குடும்ப வேளாண்மையை வருட ஆரம்பத்திலேயே வடமாகாண அமைச்சு உழவர்களுக்கு விழாவெடுத்து அதுவும் பெருவிழாவாக கடந்த 18.01.2014 அன்று கிளிநொச்சியில் கோலாகலமாக எடுத்து ஆரம்பித்திருப்பது வரவேற்புக்குரியது. வடமாகாண விவசாய, கமத்தொழில், கால்நடைகள் அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களது சிந்தனையில் மாகாண அமைச்சு அனைத்தும் ஒன்று கூடி உழவர்களுக்கு விழாவெடுத்து விருதும கொடுத்து மதிப்பளித்ததை மனந் திறந்து பாராட்ட வேண்டும. உழவர்களுக் கான உழைப்பினை கௌரவப்படுத்திய விதமும் அதற்காக வீட்டுத்தோட்ட போட்டிகளையும் பண்ணையாளர்களுக்கான போட்டிகளையும் வடமாகாணமெங்கும நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை விருந்தினர்களைக் கொண்டு குறிப்பாக மாகாண முதலமைச்சர் முன்னை நாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களைக கொண்டு கௌரவப்படுத்தியமை நல்லதொரு கைங்கரியமாகும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனப்படுத் திய உலக குடும்ப வேளாண்மை நாளை உழவர்களை மகிழ்ச்சிப் படுத்தி கொண்டாடியதன் மூலம் வட மாகாண அமைச்சு முன்னணியில் திகழ்கின்றது என்றால் மிகையாகாது. அதே நேரத்தில் விவசாய பெருமக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களினை யும் துடைத்தெறிய மாகாண அமைச்சு முன்வரவேண்டும். தனது சிந்தனையிலு தித்ததை செயலாக்கி மாணவர்களை ஊக்கப்படுத்தி பசுமை அமைதி விருது வழங்கி கௌரவித்த சூழலியலாளன் ஐங்கரநேசன் வடமாகாண விவசாய அமைச்சராகி உழவர்களுக்கு பெருவிழாவெடுத்து அதில் அவர்களுக்கு விருதும் வழங்கி. கௌரவப்படுத்தியமை வடமாகாண வேளாண்மையின் விருத்திக்கான திறவுகோல என கருதலாம். எழுதும் இகைகளையும் சிறப்பு விருந்தினராக்கி எழுத்துக்கு பெருமை சேர்த்து கௌரவப்படுத்தியதை நன்றியுடன் பகிர்ந்து கொள்ளும் அதே வேளையில் வளங்களையும் வளவாளர்களையும் ஒன்று திரட்டி எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு கண்டிட வழிசெய்தல் வேண்டும். எங்களுக்கிடையிலுள்ள கசப்புணர்வுகளை இனியும் பெரிதாக்கி அதிலே நேரத்தையும் உழைப்பையும் செலவு செய்யாது அழிந்த எமது தேசத்தை கட்டியெழுப்ப அனைவரையும் இணைத்து இன்னும் நாம் உழைத்து எமது விவசா யப் பெரு மக்களுக்கு நம்பிக்கையை கொடுக்க நாமெ ல்லோரும் பாடுபட வேண்டும்.

உலக உணவு ஸ்தாபனம் தீட்டியுள்ள திட்டங்கள் அனைத்தும் எமது பிரதேசத்திற்கு ஏற்புடையவையாகும். அவற்றை நாம் அவதானித்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பலபக்கங்களிலிருந்தும் முயற்சி செய்ய வேண்டும். முயற்சி நிச்சயம் திருவினையாக்கும். ஆனால் நாம் இணைந்து கடினமாக உழைக்க வேண்டும். "என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில், ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்." என்ற பொன்மனச்செம்மலின் காந்த வரிகள் என்றும் எம் சிந்தனையில் ஓடிக்கொண்டிருக்கின்றது. எம்மை நாம் மறந்து தூரத்துப் பச்சையை நம்பியிருக்கின்றோம். இது வருத்தப்படுவதற்கும் வேதனைப்படுபதற்குமான விடயமாகும். உழவர் பெருமக்கள் மட்டும் கடினமாக உழைக்க வேண்டும் என நாம் கூறிக்கொண்டு பதவியில் இருந்து நித்திரை கொள்ள முடியாது. பதவிக்காக கதிரைக்கு வரும் ஒவ்வொருவரும் தான் என்ன செய்ய வேண்டும் என திட்டம் தீட்டி அதனை வெளிப்படையாகவே தெரியப்படுத்தி செயலில் காட்டவும் வேண்டும். அதை விடுத்து தனிப்பட்ட சுகபோகங்களுக்காக பதவிக்கதிரையை பயன்படுத்துவது எமது முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் பாதிக்க செய்வதோடு இன்னொரு அழிவுக்கும் இட்டுச் செல்லும். அழிந்து விட்டதென புலம்பும் நாங்கள் இருப்பதையும் அழித்துவிடக்கூடாதல்லவா!.

வடமாகாண மட்டத்தில் வீட்டுத்தோட்ட போட்டியையும் பாற்பண்ணை செய்கையாளர்களுக்கு தனியாக போட்டியும் வைத்து அவர்களை ஊக்குவிப்பது குடும்ப வேளாண்மைக்கான அடித்தளமாகும். இதுவிடயத்தில் மாகாண விவசாய அமைச்சும் மாகாண கால்நடை மற்றும் விலங்கு வேளாண்மை அமைச்சு அதிகாரிகள், மாகாண திணைக்களங்கள் அனைத்து வியக்கத்தக்க வகையில கிளிநொச்சியில் வடபகுதி விவசாயிக்ளை அழைத்து வந்து பெருவிழாவாக காட்டியிருக்கின்றார்கள். உலகளாவிய மட்டத்திலேயே குடும்ப வேளாண்மையை முன்னிலைப் படுத்தி ஊக்குவிக்கும் போது நாம் இன்னும் நிறையவே செய்யலாம். எமக்கிருக்கும் வளமான தாய் மண், சேர்ந்திருக்கும் வளங்கள், எமது கடின உழைப்பு இவை போதுமே எமது உணவை நாமே உற்பத்தி செய்ய. தேவையற்ற உள்ளீடுகளை அதிலும் குறிப்பாக அசேதன இரசாயனங்களை தவிர்த்து நாம் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்தால் குடும்ப வேளாண்மை நஞ்சற்ற நிறை வான சத்துணவான சமச்சீரான இயற்கை உணவை நிச்சயம் தரும் என நாம் நம்பலாம். இது குடும்ப உறவுளுக்கான அறை கூவல். இங்கே குடும்பம் என்பது வடமாகாண உழவர் பெருமக்களையும் தேசத்தின் மக்களனைவரையும், உலக விவசாய பெருமக்களையும் குறிப்பிட்டுக்கொள்ளும். மேலும் உலக விவசாய பெருமக்களுக்கான செய்தி யாக அவர்களது இன்னல்களுக்கு வழிகண்டு ஒவ்வொரு விவசாய பெருமகனாரினதும் வயல் விளைந்து செழித்து வரவு பலமடங் காகி மகிழ்ச்சி தாண்டவமாட வேண்டும். இதற்காக விரைந்து எளிய பயன்தரும் தொழில்நுட்பத்தினை நாம் இனங்கண்டு அதனை புகுத்தி மக்க ளின் பயிரழிவுக்கு மாற்றுவழி கண்டிட வேண்டும்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது வடமாகாண அபிவிருத்தி நோக்கிய நல்லெண்ண சமிக்ஞையாக நாம் கொண்டு விவ சாய பெருமக்களுக்கு தேவைப்படும் அனைத்து வசதிகளையும் வயற்காட்டிலும் அவா தம மனையிலும் செய்து கொடுக்க வேண் டும். மக்களின் தேவையறியாத விருப்ப மறி யாத திட்டங்களை தீட்டுவதை தடை செய்ய வேண்டும். பயன்பெறுபவர்களது சுயமான அனுமதியில்லாமல் எந்த சொத் தையோ அல்லது பொருளையே அழிக்க முடியாது.

இம்முறை இயற்கை பலமாக அனைவரையும் சோதிக்க தொடங்கியிருக்கின்றது. வருட மழைவீழ்ச்சியில் கணிசமான அளவு வீழ்ச்சி கண்டிருப்பது பலபிரச்சினைகளை தோற்றுவிக்கப்போகின்றது. காலபோக நெற் செய்கையில் பின்னடைவு கண்டிருக் கின்றது. மழையின்றி பயிர்களனைத்தும் வாடியிருப்பதைப் பார்க்க மனம் சோர்வுறுகின்றது. உணவுக்கு தட்டுப்பாடு தோன்ற இடமுண்டு. நீர்நிலைகள் வற்றி கால்நடைகள் தவிக்கப் போகின்றன. இயற்கையழிவு எம்மை நோக்கியிருப்பது எமக்கு தெரிகின்றது. எம்மினிய உறவுகளே! இவ்வாறானசோதனை எமக்கு புதிதல்லவே! துயரிலும் உணவு படைத்தவர்களல்லவா நீங்கள்! மாற்று வழிகண்டு உணவுற்பத்தியில் நாம் ஈடுபட வேண்டும். எம்மால் முடியும். வல்ல வனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள். இருப்பதை வைத்து நாம் உயர்ந்து காட்ட வேண்டும். இதற்கு கல்வியுலகம் நிச்சயமாக பக்கபலமாக இருக்கும். அந்த வகையில் விவசாய பீடத்திற்கும் பொறுப்புண்டு. அதனை தட்டிக்கழிக்க முடியாது.

கிளிநொச்சியிலியங்கவிருக்கும் பீடங்களுக்கு வேலையாட்களை வேலைக்கமர்த்தும் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதியில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றமையினால் அந்த பகுதி மக்களை கருத்தில் கொண்டது போல கிளிநொச்சியிலமையவிருக்கும் பீடங்களுக்கு வேலைக்காக கிளிநொச்சி பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை பெறும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாகும். இதனை பல்கலையில் பணிபுரியும் அனைவரும் உணர்ந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு வடமாகாண விவசாய அபிவிருத்தியில் முழுமையான பங்குண்டு. வெளியேறும் விவசாய பட்டதாரிகள்சுய வேலைவாய்ப்பை தேடி பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் தொழிற்சாலைகளை உருவாக்கவேண்டும். பொறியியல் பீடமும் விவசாய பீடம் இதற்கான ஆயத்தங்களை விரைந்து முன்னெடுக்கும் என நம்புவோமாக.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைய ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சாரதிகளுக்கு நியமனத்தில் முன்னுரிமை

## வழங்கக்கோரி பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம்

(குருமன்காடு)

வடமாகாணத்தில் ஒப்பந்த, அமைய அடிப்படையில் சாரதிகளாக நியமிக்கப்பட்டவர்களை நிரந்தர நியமனத்தின் போது முன்னுரிமை அடிப்படையில் உள்ளீர்க்குமாறு வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வடமாகாண பேரவைச் செயலக செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைய, ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளாக கடமையாற்றியவர்களுடனான சந்திப்பொன்றினை நேற்று முன்தினம் சிவமோகன் மேற்கொண்டிருந்தார்.

அவ் வேளையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அங்கு தொடர்ந்து அவர் கூறுகையில்,

கடந்த பல வருடங்களாக போர் சூழ்நிலையிலும், மக்கள் இடம் பெயர்ந்து துன்பம் நிறைந்த வாழ்க்கையினை முட்கம்பி வேலிகளுக்குள் நடத்திய போதும் சாரதிகளால் ஆற்றப்பட்ட சேவை சிறப்பானது. தொடர்ந்தும் உங்களது சேவை குறித்த திணைக்களங்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருந்தது. இவ்வாறான நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் தங்களது சேவையினை நிறுத்துமாறு வடமாகாண பிரதம செயலாளரினால் குறித்த திணைக்களத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனால் இத் தொழிலையே நம்பி வாழ்ந்த உங்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளதாகவும் நீங்கள் தெரியப்படுத்தியிருந்தீர்கள்.

இதனையடுத்து, இம் மாதம் 9 ஆம் திகதி, வடமாகாணசபையில் இது தொடர்பான பிரேரணை (R/04/2014/23) ஒன்று என்னால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை சபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஆதரித்து நிறை வேற்றியுள்ளார்கள்.

இதனடிப்படையில், எனது பிரேரணையில் கூறப்பட்டது போன்று வடமாகாணத்தில் உள்ள திணைக்களங்களில் அமைய, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சாரதிகளின் நிலையை கருத்தில் கொண்டு அவர்களது சேவைக் காலத்தை டிசெம்பர் 31 உடன் நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டதை இரத்துச் செய்யுமாறும், அவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் நியமனங்களை வழங்குமாறும் வடமாகாண பேரவைச் செயலக செயலாளரினால் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட சாரதிகளுக்கு தீர்வுகிடைக்கும் என்றார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட சகல அமைய, ஒப்பந்த அடிப்படையிலான சாரதிகளுக்கும் இது தொடர்பான அவசரகலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மல்லாவியில் அமைந்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உப அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-250)

# தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுங்கள்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலகத் திற்குட்பட்ட மக்களும் கிராம மட்ட அமைப்புகளும் தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையை விஸ்தரிக்குமாறு வலியுறுத்தி மகஜர் ஒன்றினை கண்டாவளை பிரதேச செயலரிடம் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை கையளித்துள்ளனர்.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவிலான மக்களும் வறுமைக் கோட்டின் கீழும் வாழ்கின்ற கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து மக்களும் கரைச்சி, புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அநேகமான கிராமங்களிலுள்ள மக்களும் தர்மபுரம் வைத்தியசாலையையே பயன்படுத்தி வருகின்றனர்.

ஆயினும் இவ் வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் விஸ்தரிக்கப் படாமையினால் வெளி நோயாளர்கள் மாத்திரமே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

எமது மாவட்டம் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் அனைத்து துறைகளிலும் துரிதகதியில் வளர்ந்து வருகின்ற இவ் வேளையில் யுத்தத்திற்கு முன்பிருந்த செயற்பாடுகள் தற்போது குறைவடைந்து செல்கின்றது.

தர்மபுரம் வைத்திய சாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிப்பதற்காக பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ள போதிலும் இடப்பற்றாக் குறையினால் விஸ்தரிக்கப்படாமலுள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளின் விஸ்தரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட வைத்திய சாலையின் மேற்குப் புறமாகவுள்ள 10 ஏக்கர் காணியை 7 குடும்பங்கள் அபகரித்துள்ளனர். இவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டும் அவ்விடத்தை விட்டு செல்லவில்லை.

இதனால் பிரதேசத்திலுள்ள அனைத்து மக்களும் பாதிப்புறும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் முல்லை.மாவட்டத்திலுமுள்ள பொது மருத்துவ மனைகளுக்கு இடையில் 40 கிலோ மீற்றர் இடைவெளியில் மையப் பகுதியில் அமைந்துள்ள இவ் வைத்திய சாலையின் இருப்பு மிக முக்கியமாகும். எனவே மக்களின் இக் கட்டான சூழ் நிலையை உணர்ந்து கொண்டு வைத்தியசாலையை விஸ்தரிக்க வேண்டு மென அதில் கூறப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகளை வடமாகாண சுகாதார அமைச்சர் உட்பட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கிளி நொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர். (அ-9-263)



வவுனியா தெற்கு வலய தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு வவுனியா சைவப்பிரகாசா ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் மற்றும் மாணவர்கள் வரவேற்கப்படுவதையும் பாடசாலை அதிபர் திருமதி கி.நந்தபாலன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# புதிய நிர்வாக தெரிவை விரைவில் மேற்கொள்க

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட சனசமூகநிலையங்கள் அனைத்தும் இம்மாதம் நிறைவடைவதற்கு முன்னர் புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச சபையின் சனமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.சசிகுமார் அறிவித்துள்ளார்.

மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட 46 கிராம சேவ்வயாளர் பிரிவுகளிலுமுள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்தி கூட்ட அறிக்கை, புதிய நிர்வாகிகளின் விபரங்கள், கூட்டத்தில் எடுக்கப்பட்ட விபரங்களை பிரதேச சபைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-267)




# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் வற்றாப்பளை பொதுச் சந்தை




(முல்லைத்தீவு)

வற்றாப்பளை பொதுச்சந்தை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் இப்பொதுச் சந்தை இயங்கி வருகின்றது

2009 ஆம் ஆண்டுஇடம்பெற்ற யுத்தத்தினால் சந்தைக்கட்டடம் சேதமாகி மீண்டும் 2010 ஆம் ஆண்டு முதல் அதே இடத்தில் இயங்கி வருகின்றது

இந்நிலையில் யுத்தத்தினால் சேதமடைந்த பொதுச் சந்தையின் மரக்கறி சந்தைப்பகுதி திருத்தம் செய்யப்பட்டு மீன் சந்தையும் கடைத் தொகுதியும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 2012 ஏப்ரல் 6 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக விடப்பட்டது ஆயினும் சந்தையில் அடிப்படை வசதிகள் சீரின்மையாக காணப்படுகின்றது

குறிப்பாக குடிநீர் வசதிக்காக கிணறு அமைக்கப்பட்டுள்ள போதிலும் அது சுத்திகரிக்கப்படாமலும் குடிநீர்த்தாங்கி குழாய் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை

அத்தோடுமின்சார வசதியின்மை, பாதுகாப்பு வேலிகள் சீரின்மை, கழிவகற்றல் செயற்பாடுகளில் அக்கறையின்மை சந்தை வளாகம் பற்றையாக காணப்படல், சந்தைக்குச் செல்லும் வீதி சீரின்மை, களஞ்சிய சாலை, காவலாளி, ஆண், பெண்ணுக்கென தனியான மலசல கூட வசதிகள் குப்பைகளைப் போடுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமை, இறைச்சிக்கடையின்மை போன்ற பல்வேறு குறைபூடுகள் காணப்படுகின்றன

எனவே குறித்த சந்தையை வற்றாப்பளை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 518 குடும்பங்களிற்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்திவருவதனால் அங்கு நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கரைதுறைப் பற்று பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# மின்சாரம் தடைப்படும்

(மாங்குளம்)

கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பி.ப. 6 மணிவரை கனகராயன்குளம், குறி சுட்டகுளம், பெரியகுளம், மல்லாவி, துணுக்காய், உயிலங்குளம், தென் னியன்குளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என மாங்குளம் மின்சாரசபை அறிவித்துள்ளது. (டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களின் சேவை நலன் பாராட்டு



### துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

திரு.மா.சின்னத்தம்பி (இளைப்பாறிய பேராசிரியர் கல்வியியற்றுறை) அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அனைத்து மாணவர்களினாலும் விரும்பப்படும் ஒரு சிறந்த பேராசிரியராக விளங்கியவர் திரு. சின்னத்தம்பி. அவருடைய ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் நடவடிக்கையும் தினமும் தான் புதிதாக அறிந்து கற்றவற்றை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களின் அறிவை வளர்க்க அவர் எடுக்கும் முயற்சிகள் பாராட்டக்கூடியவை. இத்தகைய முகாமைத்துவமும் செயற்திறனும் ஏனைய பல்கலைக்கழக ஆசிரியர்களால் பின்பற்றப்பட வேண்டியதொன்றாகும். திரு.சின்னத்தம்பி அவர்கள் இன்னும் பல காலம் இத்தகைய தனது வளத்தினை மாணவர்களுக்கு நல்கி சுக நலத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்,
துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.



### கற்பித்தலில் ஆராக்காதல் கொண்ட பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறையின் பேராசிரியராக விளங்கிய திரு.மா.சின்னத்தம்பி அவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ளமையையொட்டி கல்வி முதுமாணிக் கற்கைநெறி மாணவர்களால் முன்னெடுக்கப்படும் பணி நயப்புவிழா மலரில் எனது சிந்தனைத் தெறிப்பை (Reflection) பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற்றுறை ஆரம்பிக்கப்பட்டு 34 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் 22 வருடங்கள் இத்துறையில் பணியாற்றியுள்ளார். ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கு காலப் பகுதியில் எமது கல்வியியற்றுறையின் கல்வி சார் நடவடிக்கைகளில் பேராசிரியர் அவர்களின் சேவை செறிந்திருந்தது. விரிவுரையாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராக, பேராசிரியராக என தமது தொழில்வாழ்க்கையின் பதவி நிலைகளை உயர்த்திக் கொண்டு தமது சேவையை இடையறாது அவர் வழங்கினார்.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களுடன்21 வருடங்கள் கல்வியியற்றுறையில் ஒன்றாகப் பணியாற்றியவன் என்ற வகையில் அவ்ரை நான் நன்கு அறிவேன். தமது மனைவி, பிள்ளைகள் ஆகியோரிடத்துக்கொண்டிருந்த அன்பையொத்த ஆராக்காதலை அவர் கல்வியிடத்தும் கொண்டிருந்தார். புதிய அறிவுக்கான தேடல் நாட்டம் அவரிடம் ஆழமாகக் குடிகொண்டிருந்தது. தமது அறிவுத்தேட்டத்துடன்தெளிவாக இவர் விரிவுரைகளை ஆற்றிவந்தார். குறைந்த வளங்களுடன் தவிவு நிலை சிறப்பாக அமையாத விரிவுரை மண்டபங்களிலும் கூட தமது குரல் வளத்தினாலும் புலமையினாலும் மலர்ச்சியுறு புன்னகையினாலும் மாணவர்களைக் கவர்ந்தார். மாணவர் எவரையும் ஒருபோதும் இவர் சினந்து ஏசியதில்லை. எமது துறையில் மாணவர்கள் எல்லோராலும் விரும்பப்படும் விரிவுரையாளராக இவர் விளங்கினார். பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் எக்கருமத்தையும் நன்கு திட்டமிட்டுச் சிறப்புற ஆற்றுவார். இதனால் இவர் ஆற்றும் சகல கருமங்களிலும் நேர்த்தியிருக்கும். ஆய்வேடுகளிலும் சஞ்சிகைகளிலும் இவர் எழுதும் கட்டுரைகளையும்கூட எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவுற விளக்கும் வகையில் தர்க்க நியாயங்களுடன் கூடியதாக முன்வைப்பார்.

பல்கலைக்கழகச் சேவையில் இணையும் முன்னர் ஆசிரியர் சேவையையும் சிறப்பாக வழங்கி, இலங்கையின் புகழ்பூத்த பொருளியல் ஆசிரியராக விளங்கியிருந்தமையும்கூட பேராசிரியர் அவர்களின் கல்வி மீதான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதாகும்.

நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் கல்வியியற்றுறையில் பேராசிரியர் அவர்களும் நானும் மட்டுமே பணியாற்றிக்கொண்டிருந்தோம். அவர் துறைத்தலைவராக இருந்தார். எமது கடமைகளுககான நியமங்களுக்கும் (Norms) அப்பால், நாம் இருவரும் சகல விரிவுரைகளையும் ஆற்றினோம். அவர் வகுத்திருந்த முன்திட்டம் காரணமாக அவர் விடுமுறையில் சென்றிருந்த இரு சந்தர்ப்பங்களில் எமது துறையின் பதில்தலைவராக நான் கடமையாற்றுவதில் எச்சிரமத்தையும் எதிர்கொள்ளவில்லை.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் பொருளியல், கல்வியியல் சார்ந்து எழுதிய நூல்கள் பல. அவை கல்வியுலகில் பெரும் வரவேற்பைப் பெற்றவை. பல்கலைக்கழக விரிவுரைகளோடு பல்வேறு துறைசார் அலுவலர்களையும் பணியாளர்களையும் வலுவூட்டுவதற்கென ஒழுங்கு செய்யப்படும் கருத்தரங்குகளிலும் செயலமர்வுகளிலும்கூட வளவாளராக விளங்கி சமூகத்தில் நன்கு மதிக்கப்படும் ஒருவராகப் பேராசிரியர் விளங்குகிறார்.

பேராசிரியரிடத்து இன்றும் காணப்படும் துடிப்பும் கல்வி மீதானஆராக்காதலும் இன்னும் பல காலம் கல்விக்கான சேவையை அவர் வழங்குவார் என்ற நம்பிக்கையைத் தருகின்றன. அவரின் கல்விப் புலமையையும் கற்பித்தல்சார் அனுபவங்களையும் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்குப் பல்கலைக்கழகமும் ஏனைய கல்விசார் நிறுவனங்களும் காத்திருக்கின்றன. பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களின் சேவையை நாம் மேலும் பெற்றுக்கொள்வதற்கு, அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் இறைவன் அருளவேண்டும் எனப் பிரார்த்தித்து, அவர் பல்லாண்டு நலமாக வாழ்கவென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி த.கலாமணி சட்டத்துறைத் தலைவரும்
கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரும்.
யாழ். பல்கலைக்கழகம்.



**மாரிமுத்து சின்னத்தம்பி 1990-2013 யாழ். பல்கலைக்கழகத்தில்**

துறைத்தலைவர் - கல்வியியற்றுறை (2003-2006)
துறைத்தலைவர்- சட்டத்துறை (2009-2011)
பணியாளர்-அலுவலர் அபிவிருத்தி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம் (2010-2011)
கற்கைநெறி இணைப்பாளர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (2005-2008) கல்வியியல் முதுமாணி (2004-2007)
வருகைப் பேராசிரியர், ரொரன்ரோ பல்கலைக்கழகம், கனடா (2011)
பணியாற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்:
இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழு தேசிய கல்வி நிறுவகம்,
மனிதவள விருத்திப் பயிற்றுநர் (வங்கித்துறைப் பணியாளர்களுக்கான பயிற்றுநர்)



### *கல்வி வல்லோன் பேராசான் மா.சின்னத்தம்பி அவர்கள்*

கல்வியுலகில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துள்ள பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களுக்கு கல்வி முதுமாணி10 ஆவது அணியினரால் நடத்தப்படுகின்ற கௌரவிப்பு விழா பத்திரிகை சிறப்பு பக்கத்திற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஆசிரிய உலகிற்கு அவர் செய்த சேவைகள் அளப்பரியது. தன்னுடைய சேவைக்காலத்தில் ஆசிரியர்களின் பல்வேறு பயிற்சி நெறிகளிலும் விரிவுரைகள் ஆற்றியுள்ளார். மாணவர்களால் மிகவும் நேசிக்கப்படும் ஒருவர். கற்பிப்பதில் வல்லவர். எந்தவொரு விடயத்தையும் திட்டமிட்டு மேற்கொள்வதனால் பல வெற்றிகளுக்கு நாயகனாகத் திகழ்கின்றார். ஆசிரியர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவியாக பல நூல்களை வெளியிட்டுள்ள பெருமையும் அவரைச்சாரும். அத்துடன் தேசிய,சர்வதேச மட்டத்தில் இடம்பெறும் பல்வேறு வகையான கருத்தரங்குகளிலும் பங்குபற்றி பல ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். கற்பிப்பதில் கவர்ச்சியை ஏற்படுத்தி மாணவர்களின் கவனத்தைச் சிதற விடாது தன்பக்கமே வைத்திருக்கும் கைவந்த கலை அவருக்கேயுரியது.

அவருடைய மகத்தான சேவையைக் கௌரவித்து நடைபெறும் இவ்விழா நாள் பெறுமதியான ஒரு நாளாகும். அவருடைய வாழ்க்கைக் காலம் சிறப்பாக அமையவும் சமூகப் பணிகள், கல்விப் பணிகள் சிறக்கவும் தனது குடும்பத்தினரோடு இனிமையாகத் தனது வாழ் நாட்களைக் கழித்து மகிழ்வுடன் வாழ வாழ்த்துவதில் பெருமையடைவதோடு இறையருள் கிடைக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி (திருமதி) ஜெ.இராசநாயகம், கல்வி முதுமாணி இணைப்பாளர், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.



### கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையில் சுமார் 22 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றிருக்கும் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களை க.பொ.த.உயர்தரத்தில் நான் கல்வி கற்றபோது ஒரு நல்லாசிரியராக எனது சக மாணவர்களால் புகழப்பட்ட காலத்திலிருந்து அறிந்திருந்தேன். அந்த நல்லாசிரியரிடம் கல்வி கற்கும் நல்ல வாய்ப்பு பட்டப்பின் கல்வித் தகைமை நெறியை நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் (1992-1994) பெற்றபோது எனக்குக் கிடைத்தது. அவரது சிறந்த வழிகாட்டல் பின்னர் என்னை அவரது சகபாடியாவதற்கும் இன்று கல்வியியற்றுறை தலைவராவதற்கும் வழிகாட்டியமையை மறப்பதற்கில்லை.

நல்லாசிரியராக கல்வியியற்றுறையின் தலைவராக, நல்ல பண்பாளனாக, அகன்ற அறிவும் ஆற்றலும் மிக்க பேராசிரியராக, சமூகத்தின் பெறுமதிமிக்க வழிகாட்டியாக அவரது ஆளுமை பரந்து விரிந்து நின்றமை கண் கூடு.

அவர் சேவை கல்வியியற்றுறையின் எல்லா கற்கை நெறிகளிலும் மீண்டும் தொடரும். தொடர வேண்டுமென்பதே எனது அவா. அதனால் அவரது ஓய்வு காலத்திற்கு வாழ்த்து வழங்குகின்றேன் என்பதனை விட ஓய்வு காலத்தில் தொடரப்போகும் கல்விப்பணி எம் துறையை, சமூகத்தை மேலும் வளப்படுத்த வேண்டும் என்பதற்கான வாழ்த்தாகவே இதனைக் கருதுகின்றேன்.

கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்
தலைவர்,கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### நல்ல நண்பர் நலமுடன் வாழ்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றிருக்கும் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் பற்றிய வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். திரு.சின்னத்தம்பியுடன் எனக்குள்ள தொடர்பும் நட்பும் ஏறக்குறைய ஐந்து தசாப்தகால வலிமை கொண்டது. 1966 காலப்பகுதியில் யாழ். இந்துக் கல்லூரியில் இவர் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவராக கற்ற காலத்தில் நானும் அங்கு கல்வி கற்றிருந்தேன். அக்காலத்திலிருநது அவரது கல்வி, பேச்சு மற்றும் பல்வேறு திறன்கள் பற்றி நன்கறிவேன். அவர் சுயமுயற்சி, கற்றலில் ஆர்வம், சுய முனைப்பு கொண்டவராக அக்காலத்திலும் திகழ்ந்தார்.

1990 களில் பல்கலைக்கழகத்துள் பதவியேற்று விரிவுரையாளராக வந்த பின்பு மீண்டும் எங்கள் நட்பு புத்துயிர் பெற்றது. எங்கள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தில் அவரது பங்குபற்றல் மிகவும் பயன்மிக்கது என்பதை இன்றுவரை உணர்கின்றேன்.

கற்பித்தலிலும் தொடர்ந்து கற்பதிலும் அவரிடம் காணப்படும் உண்மையான ஈடுபாடும் முயற்சியும் அவரது முன்னேற்றத்துக்கும் நற்தொடர்புக்கும் காரணமாக இருப்பதை நான் நன்கு அறிவேன். ஓய்வு நிலையிலும் எங்கள் பீடத்துடன் அவரது தொடர்பு நிலைக்க வேண்டும். எதிர்காலத்திலும் எங்களிடையிலான நட்பின் ஈரம் உலராமல் நல் ஆரோக்கியத்துடன் அவர் வாழ வேண்டுமென வாழ்த்தி மகிழ்கின்றேன்.

பேராசிரியர் கலாநிதி ச.சத்தியசீலன், பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### கல்விப் பேரரசு பேராசான் மா. சின்னத்தம்பி அவர்கள்

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் பெருமதிப்புக்குரிய மா.சின்னத்தம்பி அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாவார். கல்விச் சேவையில் ஆசிரியராக இணைந்து கொண்ட அவர் தனது திறமையாலும் விடாமுயற்சியாலும் கல்வியியற்றுறை விரிவுரையாளராக யாழ்.பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். பல்கலைக்கழகத்தில் உயர் பதவிகளை வகித்த அவர் கல்வியியற்றுறை தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். அவரது சேவை பல்கலைக்கழ கத்தோடு மட்டும் நின்றுவிடாமல் தேசிய மட்டத்தில் உயர் கல்வி நிறுவணங்களோடும் சர்வதேச மட்டத்திலும் விரிவடைந்து சென்றுள்ளது.

இன்று அவர் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெறும் நிலையில் பேராசான் அவர்களது சேவை கௌரவிப்பு விழாவை முதுகல்விமாணி அணி பத்து சார்பாக தலைமை தாங்கி நடத்தவும் அவரை வாழ்த்தவும் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் அவர்களை நான் கல்வியியற்றுறை பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு மாணவியாக வந்த போது அவரிடம் கற்கும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது. அப்போது அவர் இருந்த விரிவுரையாளர்களில் சின்னத்தம்பியாகவே இருந்தார். அவரது விரிவுரை என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். தனக்கே உரிய பாணியில் எடுத்த விடயத்தை ஆழமாக தானும் கற்று எமக்கும் கற்பிப்பார். அவரது விரிவுரையில் மாணவர்கள் மிகவும் உற்சாகமாக இருப்பார்கள்.

பேராசிரியர் கல்வியியற்றுறை மாத்திரமின்றி பொருளாதார துறையிலும் நிறைந்த அறிவும் ஆற்றலும் கொண்டவர். கல்வியியலும் பொருளாதாரமும் அவரது இரண்டு கண்கள். எதையும் பொருளாதார நோக்கோடு பார்ப்பது, சிந்திப்பது, செயற்படுத்துவதும் அவருக்கே உரிய ஒரு பண்பாகும். அவர் விரிவுரையாற்றும் போது எந்தவொரு சலிப்போ, வெறுப்போ வருவதில்லை. நகைச்சுவையுடன் எல்லோரையும் தன்பக்கம் இழுத்து விடுவார். தான் பாட நிபுணர் என்ற நிலையிலிருந்து இறங்கி மிகவும் எளிமையாகவும் அதேவேளை ஆழமாகவும் விரிவுரை ஆற்ற வல்லவர்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அச்சாணியாக இருப்பது கல்வியே. கல்வியூடாகவே அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமென பல கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவர் விரிவுரையாளராக இருந்த காலத்தில் பல நூல்களை கல்வியியற்றுறையிலும் பொருளாதாரத்திலும் எழுதியுள்ளார். அது மாத்திரமல்ல பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அத்தோடு வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக பல கட்டுரைகள் எழுதியுள்ளார். பாடசாலை மட்டத்திலும் ஆசிரியர்கள் மட்டத்திலும் சமூக மட்ட விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதில் அவை பெரும் பங்காற்றின.

எமது பேராசிரியர் சிறு விதையாக கல்வியியற்றுறைக்கு வந்து படிப்படியாக பெரும் ஆலமரமாக கிளைவிட்டு வளர்ந்து கல்வித் துறையில் ஈடுபடும் அத்தனை பேருக்கும் பெரும் நிழலாக இருக்கின்றார். எனவே, இதுவரை காலம் கல்விப்பணி செய்து ஓய்வுபெற்றுச் செல்லும் பேராசானிடம் முது கல்விமாணி கற்கையை கற்கும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளதை எண்ணி மன மகிழ்வடைகின்றோம். தொடர்ந்தும் எங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அவரது அறிவுரைகளும் ஆலோசனைகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அவர் ஓய்வுபெற்றுச் செல்லும் நிலையில் அவரை எமது முதுகல்விமாணி அணி சார்பாக அவர், தனது குடும்பம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு உடல் நலத்தோடும் நீண்ட ஆயுளோடும் வாழ வேண்டுமென வாழ்த்தி அவரது கல்விச் சேவைக்கு சிரம்தாழ்த்தி அது தொடர வேண்டுமென இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

ஜெயா தம்பையா
தலைவர்
முதுகல்விமாணி அணி X,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத் தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப் படுத்தி விடும். - மெர்ரி கினாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு முதல்வரின் கருத்தை நீதியரசரின் தீர்ப்பாக எடுக்க வேண்டும்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இந்த நாட்டின் உச்ச நீதிமன்றின் நீதியரசராக இருந்தவர்.

இப்போது அவர் பணியில் இருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் அவரின் கருத்துக்களை ஒரு நீதியரசரின் கருத்தாகவே பார்க்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கூறுகின்ற கருத்து என்பது அரசியல் சூழ்நிலையில் மாறுபடும்.

ஓய்வு பெற்ற அரச அதிகாரி ஒருவரின் பேச்சு சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்றாற்போல் வேறுபடும்.

ஆனால் நீதியரசராக இருந்த ஒருவர் ஓய்வு பெற்றிருந்தாலும் அவர் கூறுகின்ற கருத்துக்களை நீதியின் தீர்ப்பாகக் கருத வேண்டும்.

அவ்வாறு கருதாத பட்சத்தில் அவர் நீதியரசராக இருந்த காலத்தில் வழங்கிய தீர்ப்புக்கள் அனைத்தும் கேள்விக்குரியனவாக மாறிவிடும்.

ஆக, நீதியரசர் என்பது நீதிமன்றில் மட்டுமல்ல அவர் அப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவர் நீதியரசரே.

எனவே இந்த அடிப்படையிலேயே முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் கருத்துக்களையும் உரைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதன் பிரகாரம் நோக்கின், அண்மையில் வலிகாமம் தெற்கில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற நீதியரசரும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருமான விக்னேஸ்வரன் அவர்கள்,

இலங்கை அரசு சட்டத்திற்கு முரணாகச் செயற்படுகின்றது எனக் கூறியுள்ளார்.

சட்டத்திற்கு முரணாக இலங்கை அரசு செயற்படுகின்றது என அவர் கூறியதை வடக்கின் முதலமைச்சர் கூறியதாகப் பார்க்காமல், இந்த நாட்டின் உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்து தீர்ப்பு வழங்கிய ஒருவர் கூறியதாகப் பார்க்க வேண்டும்.

சாதாரணமாக அரசியல்வாதிகள் தத்தம் தரப்பிற்கு எதிரானவர்களைக் குற்றம் சாட்டுவது வழமை. அந்தக் குற்றச்சாட்டுகள் நியாயமானதாகவும் இருக்கலாம். அதுபற்றி நாம் இங்கு எதுவும் கூறவில்லை.

நாம் இங்கு பிரஸ்தாபிப்பதெல்லாம் சட்டத்திற்கு முரணாக அரசு செயற்படுகின்றது என ஓய்வுபெற்ற நீதியரசர் கூறியதையேயாகும்.

எனவே, ஒரு நீதியரசராக இருந்தவரின் இந்தக் கருத்து இலங்கை அரசின் போக்கை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

சட்டத்திற்கு முரணாக அரசு செயற்படுகின்றது எனக் கூறப்பட்ட கருத்துத் தொடர்பில் தென்பகுதி மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

யார் ஆட்சியில் இருந்தாலும் சட்டம் பாதுகாக்கப்படுவது அவசியம். சட்டம், ஒழுங்கு மீறப்படுமாயின் அது ஜனநாயக உரிமைகளைச் சிதறடிக்கும்.

இத்தகைய நிலைமை தனித்து தமிழ் மக்களையே தாக்கும் என்று தென்பகுதி மக்கள் நினைத்தால் அது மிகப்பெரும் அபத்தமாகும்.

ஆக, மேற்போந்த கருத்தை வடக்கின் முதலமைச்சர் கூறுவதாக நினைக்காமல்; ஓய்வு பெற்ற நீதியரசர் கூறியுள்ளதாக தென்பகுதி மக்கள் கருதி, சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட அரசுக்கு அழுத்தம் கொடுத்து திருத்தம் செய்ய வேண்டும்.

# யுத்தத்திற்குப் பின்னர் மக்களின் வாழ்வாதாரம் சீர்படுத்தப்படவில்லை-அமெரிக்க தூதுவர்

(கரவெட்டி)

வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் மிகவும் அழகிய பிரதேசங்களாகும். ஆனால் இங்குள்ள மக்களின் வாழ்க்கைதான் அழகில்லாமல் உள்ளது என அமெரிக்க தூதுவர் மிச்சேல் சிசன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பிரதேச மீனவர்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் 40 தொழில் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாகர்கோவில் பிரதேசத்துக்கு நான் 2002-ம் ஆண்டு அமெரிக்க இராஜதந்திர திணைக்களத்தில் பணியாற்றும போது இங்கு வந்துள்ளேன். அதன் பின்னர் இப்போது வரும்போது இப்பிரதேசம் மிகவும் மோசமான நிலையில் அழிவடைந்துள்ளதையிட்டு மனவேதனை அடைகிறேன். ஆனாலும் அரச, அரசசார பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் இப்பிரதேசம் ஓரளவேனும் முன்னேற்றம் அடைந்து வருகிறது .

வடக்கு-கிழக்கு பிரதேசம் மிகவும் அழகிய பிரதேசங்களாகும். ஆனால்இங்குள்ள மக்களின் வாழ்க்கைதான் அழகில்லாமல் உள்ளது . அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தூதுவரகங்களில் பணியாற்றும் தூதுவர்களுக் கிடையிலான கலந்துரையாடலின் போது தூதுவர்கள் பணியாற்றும் நாடுகளில் மக்களின் வாழ்க்கை தொடர்பாகவும் அவரகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொணடார்.

அவர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ளார் . எனவே யுதத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட உங்கள் வாழக்கையை சேவாலங்கா நிறுவனத்தின் உதவியுடன் 40 பேருக்கு தலா 4.5 லட்சம் ரூபா பெறுமதியான படகு இயந்திரங்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனை வைத்து வாழ்வாதாரத்தையும் தொழிலையும் மேம்படுத்துவது உங்கள கைகளிலே தங்கியுள்ளது. யுத்தத்திற்கு பின் மக்களின் வாழ்வாதாரம் வீடுகள், காணிகள் போன்றவை இன்னமும் சீர் செய்யப்படாமையால் அவர்கள் துன்பங்களை எதிர்கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார் .

இந்நிகழ்வுக்கு சேவாலங்கா நிறுவனத்தின் இணைப்பாளர் குமரநவாரட்ணா மற் றும் மாவட்ட இணைப்பாளர் எச். கண்ணன் மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், மீன்பிடி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், மருதங்கேணி பிரதேச செயலர் எ.திருலிங்கநாதன் மற்றும் முக்கிய பிரதிநிதிகள் அப்பகுதி மீனவர்களும் கலந்துகொண்டனர். (அ-24)

## பரிசளிப்புவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வியமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி குருகுலராஜா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-9-24)

## இரு நூல்களின் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் ஒன்றுகூடலும் கோகிலா மகேந்திரன் எழுதிய **புலச் சிதறல் நெஞ்சம்** மற்றும் கலாநிதி ம.பிர வீணன் எழுதிய **ஏலியன் கதைகள்** எனும் இரு நூல்களின் அறிமுக விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் மூளாய் சைவப் பிரகாச வித்தி யாசாலை அதிபர் திருமதி சிவமலர் சுந்தர பாரதி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் **புலச்சிதறல் நெஞ்சம்** எனும் நூலின் அறிமுகவுரைகளை மகாஜனக் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி பகீரதி கணேசதுரை, யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா ஆகியோர் ஆற்றுவார்கள்.

**ஏலியன் கதைகள்** எனும் நூலின் அறிமுகவுரைகளை ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி பகுதித் தலைவர் ம.பா. மகாலிங்கசிவம், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்துவார்கள். நூலின் முதற்பிரதியினை அண்ணா தொழி லகம் பொ.நடராசா பெறுவார்.

இதன்போது மாணவர்களுக்கான கல்வி உபகரணம் வழங்கல் சீர்மிய ஆசிரியர்கள் வழங்கும் செல்லிடத் தொலைபேசி எனும் நாடகம் இடம் பெறும். (அ-2)

## கடத்தப்படவிருந்த போதைப்பொருள் மீட்பு

(சென்னை)

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஹெரோயின் போதைப்பொருள் இந்தியாவில் மீட்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் குறித்த போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர். சென்னையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்தே போதைப்பொருளை மீட்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் இரண்டு கிலோகிராம எடையுடைய ஹெரோயின் போதைப் பொருளை சென்னையிலிருந்து மத்திய பிரதேசத்தின் உஜ்ஜாயின் என்னும் இடத்திற்கு எடுத்துச் சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போதைப்பொருளின் சர்வதேச சந்தைப் பெறுமதி 5 கோடி இந்திய ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருளை இலங்கைக்கு கடத்தும் நோக்கில் குறித்த நபர் எடுத்துச் சென்ற போது உஜ்ஜாயின் பேருநது நிலையத்தில் வைத்து, போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. 45 வயதான ராபீக் சுலைமான் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்க

### மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கோரிக்கை

(சென்னை)


கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ஜி.கே.வாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கச்சதீவில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமையில்லை என மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாக நேற்று முன்தினம் தகவல் வெளியானது. இது குறித்து நேற்று கருத்து தெரிவித்துள்ள மத்திய கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் ஜி.கே.வாசன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே கடந்த 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் கச்சதீவு விவகாரம் தொடர்பாக இணக்கமான தீர்வு ஏற்பட்டு அது முடிவுக்கு வந்துவிட்டதாகவும் அங்குள்ள அந்தோனியார் கோவிலின் ஆண்டு விழாவுக்கு செல்ல மட்டுமே இந்திய மீனவர்களுக்கு உரிமையுள்ளதாக நீதிமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டதாக கூறுவதே தவறு. 1974 ஆம் ஆண்டில் பாக் ஜலசந்தியிலிருந்து ஆடம் பாலத்திற்கு எல்லை மாற்றப்படுவது குறித்து இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படியே கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானதாகவும் அரசு தனது அறிக்கையில் மேலும் கூறியுள்ளது. (அ-2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நரன் எவ்வாறு நாராயணன் ஆகின்றான் என்றால் முழுமையான ஐக்கிய நிலையை அடையும்போது நரன், நாராயணனாகிறான்.

மனது என்ற சுவர் முற்றிலும் உடையும்போது நரன் நாராயணனாகத் திகழ்கிறான்.

பல முனிவர்களும் ஞானிகளும் நாராயணனுடன் ஐக்கிய நிலையடைந்து அவர்களது அனுபவத்தை எழுதியும் வைத்துள்ளார்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வலிமையே வாழ்வு



- பலன் கருதாமலும், சுயநலம் சிறிதும் இல்லாமலும் கடவுளிடம் பக்தி செலுத்துவதே சிறந்தது.
- நீங்கள் எதை நம்புகிறீர்களோ, அதுவாகவே மாறி விடுவீர்கள்.
- வலிமையே வாழ்வு. பலவீனமே மரணம். மிகப்பெரிய உண்மை இது தான்.
- தீமையிலிருந்தும் மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினையைப் பெறுகிறான்.
- சில நேரத்தில் இன்பத்தை விட, துன்பமே நமக்கு சிறந்த ஆசிரியராக விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி



நுகேகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி ஏற்பாடு செய்த சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

நுகேகொடை, தெமட்டகொட, யாழ்ப்பாணம், பாணந்துறை ஆகிய பகுதியிலுள்ள சென்.ஜோன்ஸ் கல்லூரிகள் இப் போட்டியில் மோதுகின்றன. இப் போட்டிகள் 20 ஓவர்கள் கொண்டதாக இடம்பெறுகின்றன.

அண்மையில் இடம்பெற்ற 3 ஆவது இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் தெமட்டகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.


நாணயற்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில்கபில்ராஜ்32, பிரிஷங்கர்53, ஆபிரகாம்அனோஜன்52 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்துவீச்சில் தெமட்டகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் ஏ.டீன், எம்.அப்ராஸ் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 187 என்னும் வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பாடிய தெமட்டகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியால் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் பலமான பந்துவீச்சு காரணமாக 96 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

இதன்படி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் தெமட்டகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக கரீம் மற்றும் இன்பாஷ் தலா 29 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக துவாரகசீலன் 4, கானாமிர்தன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். முன்னதாக இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் போட்டி சமநிலையடைந்தமையால் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சுப்பர் ஓவர் முறையில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-23)



*சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடத்திய வட மாகாண அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் ஏபி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. போட்டித தொடரின் சிறப்பாட்டக்காரராக தெரிவான நெல்லை பிளாஸ்ரர்ஸ் அணி வீரர் பிரகாஷிற்கான பரிசிலை தேசிய இளைஞர் கழக சம்மேளன உப தலைவர் எஸ்.விஜிதரன் வழங்கினார். (23)*

# ஆளுநர் வெற்றிக்கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டி;

வடமாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ண மாபெரும் சதுரங்க சுற்றுப்போட்டியொன்றினை நடத்துவதற்கு வட மாகாண ஆளுநர் செயலகம் தீர்மானித்துள்ளது.வட மாகாண விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக வட மாகாண ஆளுநர் அலுவலகம் இதனை செயற்படுத்த எண்ணியுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் வட மாகாணத்தை சார்ந்த அனைத்து பாடசாலை மாணவர்களுக்கான 6,8,10,12,14,16,18 வயதுக்குட்பட்ட மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களுக்கான (திறந்த சுற்றுப் போட்டிகள்) தனித்தனிப் போட்டிகளாக நடைபெறும்.

இச்சதுரங்கச் சுற்றுப்போட்டிகள் 16 ஆம் திகதி தொடக்கம் 21.02. 2014 வரை நடைபெறவுள்ளது. இப் போட்டியானது கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என நடைபெறும். கோட்ட மட்டப் போட்டிகள் 16 ஆம் திகதி தொடக்கம் 28.01. 2014 வரையும் அதில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு 30.01.2014 தொடக்கம் 09.02.2014 வரை வலயமட்டப்போட்டிகளும், 10.02.2014 தொடக்கம் 14.02.2014 வரை மாவட்ட மட்டப் போட்டிகளும் நடைபெறும். இறுதியாக மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு இறுதிச்சுற்றுப் போட்டி மாசி மாதம் 19,20,21 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.


ஆர்வமுள்ள வடமாகாண சதுரங்க வீரர்கள் இச்சதுரங்கச் சுற்றுப் போட்டிக்கு தமது அதிபர் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம். இம்மாபெரும் சுற்றுப்போட்டிக்கு 3ஆயிரம் சதுரங்க போட்டியாளர்கள் பங்கு பற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-23)

## கூடைப்பந்தாட்ட போட்டி; யாழ்.பல்கலை வெற்றி

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச சங்கம் ஏற்பாடு செய்து நடத்தும் அங்கத்துவம் பெற்ற கழகங்களிற்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற போட்டியில் ஓ.எம்.ஐ. அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதியதில் 60:22 என்னும் புள்ளிகள அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து காலிறுதிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. (க-23)

## கரவெட்டி இளைஞர் கழக பொதுக் கூட்டம்



கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளன பொதுக்கூட்டமும் பிரதேச இளைஞர் சம்மேளன விளையாட்டு விழா 2014 போட்டி நிரலிடுதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. மேற்படி நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுகிழமை காலை 8.30 மணிக்கு தேவரையாளி இந்துகல்லூரியில்நடைபெற உள்ளது.

பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் தலைவர், செயலாளர்கள் உட்பட்ட நிர்வாகசபையினரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி மனோராஜ் கேட்டுள்ளார்.

கூட்டத்தில் கலந்து கொள்ளும் இளைஞர் கழகங்கள் மாத்திரமே இவ்வருட விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கபபடவுள்ளதோடு கூட்டத்தில்வைத்தே போட்டிக்கான நிரல் தயாரிக்கப்படவுமுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-23)

# ஆஸி. சுழல் பயிற்சியாளராக ஷேன் வோண் நியமனம்



அவுஸ்திரேலிய அணியின் சிறப்பு சுழற்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக அவ்வணியின் முன்னாள் வீரர் ஷேன் வோண் நியமிக்கப்பட்டுள்ளார். உலக இருபது-20 தொடருக்கான தயார்ப்படுத்தல்களில் ஷேன் வோண் பங்குபெறவுள்ளார்.

மார்ச் மாதம் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக இருபதுக்கு இருபது தொடரில் சுழற்பந்து வீச்சு அதிக பங்கை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையிலேயே அவுஸ்திரேலியாவின் சிறப்பு சுழற்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக ஷேன் வோண் உலக இருபதுக்கு இருபது தொடருக்காகச் செயற்படவுள்ளார். அவர் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் ஆலோசகராக டெரன் லீமனுக்கு பங்களிப்புகளை வழங்குவார் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை குறிப்பிட்டது.

அவுஸ்திரேலியாவின் தேசிய அணிகள் சிறப்புத் தகுதிவாய்ந்த விசேட பயிற்றுவிப்பாளர்களின் பயிற்சிகளின் உதவியுடன் சிறந்த பலனைப் பெற முடியுமெனத் தாங்கள எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவுஸதிரேலிய கிரிக்கெட் சபை, அதன்படி உலக இருபது-20 தொடருக்கு முன்னதாக ஷேன் வோண் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதன்படி, அவுஸ்திரேலியாவின் தென்னாபிரிக்கச் சுற்றுலாவல்அவ்வணியோடு இணையவுள்ள ஷேன் வோண், பங்களாதேஷ் உலக இருபது-20 தொடரிலும் பணியாற்றவுள்ளார். (க)

## வடமராட்சி கல்வி வலய 2014 ஆம் ஆண்டுக்கான சதுரங்க (குழு) சுற்றுப் போட்டி முடிபுகள்

வடமராட்சி கல்வி வலய 2014 ஆம் ஆண்டுக்கான சதுரங்க (குழு) சுற்றுப் போட்டி கடந்த சனி, ஞாயிறு தினங்களில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 15, 19 வயதின் கீழ் ஆண், பெண் குழுப்போட்டி வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ். செல்வக்குமரன் தலைமையில் நடைபெற்றது. சனிக்கிழமை ஆண்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கு மாக போட்டி நடைபெற்றது. அப் போட்டி முடிவுகள் பின்வருமாறு,

15 வயதின் கீழ் ஆண்கள்

முதலாமிடம்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம்- உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, மூன்றாமிடம்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

19 வயதின் கீழ் ஆண்கள்

முதலாமிடம்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம்- உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி

15 வயதின் கீழ் பெண்கள்

முதலாமிடம்- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம்- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

19 வயதின் கீழ் பெண்கள்

முதலாமிடம்-யா/பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம்- யா/பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக ஆ.கோகுலராஜன், சு.திருச்செல்வம், தி.இராஜசிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற அணியினர் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளனர். (க-19)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சி உதைபந்தாட்டச் சிரேஷ்ட வீரர்கள் குழு நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை லீக்கிற்குட்பட்ட கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு பற்ற முடியும்.

இச் சுற்றுப்போட்டியில் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் பங்கு கொள்ள முடியும். உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அரை மணி நேரம் கொண்டதாக இடம்பெறவுள்ளது. போட்டிகள் டயமன்ஸ் வி.க. மைதானத்தில் 01.02.2014 ( சனி ) மற்றும் 02.02.2014 ( ஞாயிறு ) ஆகிய தினங்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை போட்டிகள் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் அணிகள் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் வைட்வோஷ் கனவு தகர்ந்தது இங்கிலாந்து அணி வெற்றி



அவுஸ்ரேலிய அணிக் கெதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதிய 4-வது ஒருநாள் போட்டி பேர்த்தில் நேற்று நடைபெற்றது.

இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் தொடக்கம் சிறப்பாக இருந்தது. அணித் தலைவர் குக் 44 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். அதன் பின் பெல்-ஸ்ரோக்ஸ் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களை சேர்த்தது. 50 ஓவர் முடிவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்கு 316 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 317 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணிகளம் இறங்கி விளையாடியது. மார்ஷ் 15 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். தொடர்ந்து வந்த வேட் 23 ஓட்டங்கள் , பெய்லி 11 ஓட்டங்கள் என நிலைக்கவில்லை. ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறு முனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பின்ஞ் 108 ஓட்டங்கள் அடித்து ஆட் டம் இழந்தார். அடுத்து வந்த மேக்ஸ்வெல் 26 ஓட்டங்கள், கிறிஸ்டியன் 23 ஓட்டங்கள் எடுத்து ஓரளவு கைகொடுத்தனர். பின்வரிசை வீரர்களான போல்க்னர் 2 ஓட்டங்கள், ஜோன்சன் 6 ஓட்டங்களே எடுத்து ஏமாற்ற அவுஸ்திரேலிய அணி 47.4 ஓவரில் 259 ஓட்டங்களுக்கு அனைத்து



விக்கெட்டுக்களையும் இழந்தது. இத னால் இங்கிலாந்து அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியின் ஸ்ரோக்ஸ் தெரிவானார்.

முதல் 3 ஒருநாள் போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்குமிடையிலான 5-வதும் இறுதியுமான ஒருநாள் சர்வதே கிரிக்கெட் போட்டி நாளை அடிலெய்ட்டில் ஆரம்பமாகின்றது. (க)

## இந்திய - இலங்கை...

களுக்கு எதிராக் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் அவர்களை அடுத்தடுத்து விடுதலை செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது எனவும் அமைச்சரின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இலங்கை மீனவர்களுக்கு எதிராக இந்திய நீதிமன்றங்களிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், சகல மீனவர்களை விடுவித்து கொள்வதில் கால தாமதம் ஏற்படக் கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

எல்லை தாண்டி வரும் மீனவர்கள் கைது செய்யப்படுவது குறைக்கப்படும் என இலங்கை அரசாங்கம் இதுவரை அறிவிக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஜெனிவாவில் இலங்கை...

வும் இது குறித்து அரசாங்கம், தன்னுடன் கலந்துரையாடவில்லை என்றும் தமரா குணநாயகம் கூறியுள்ளார்.

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் அரசாங்கத்திற்காக ஒரு முறை குரல் கொடுத்ததாகவும் அது இறுதியில் தனது கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது எனவும் மீண்டும் ஒருபோதும் அரசாங்கத்திற்காக குரல் கொடுக்க போவ தில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# இந்தியா - நியூசிலாந்து 3-வது ஒருநாள் போட்டி இன்று

இந்திய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடர் நடந்து வருகிறது.

இதுவரை நடந்துள்ள 2 போட்டியிலும் இந்தியா தோற்று 0-2 என்ற கணக்கில் பின தங்கி உள்ளது.

இரு அணிகள் மோதும் 3-வது ஒருநாள் போட்டி இன்று ஆக்லாந்தில் நடக்கிறது. இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு போட்டி தொடங் குகிறது. வெற்றி நெருக்கடியில் இந்திய அணி களம் இறங்குகிறது. இன்றைய போட்டியில் தோற்றால் தொடரை இழந்துவிடும்.

இதனால் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இந்திய வீரர்கள் உள்ளனர். பேட்டிங்கில் வீராட் கோலி, கப்டன் தோனியை தவிர மற்ற வீரர்கள் சோபிக்கவில்லை. தொடக்க வீரர்கள் ஷிகார் தவர்ன்,ரோகித் சர்மா நிலைத்து ஆடுவது அவசியமாகும். நடுத்தர வரிசையில் முன்னேற்றம் வேண்டும். பந்துவீச்சில் முகமது சமி மட்டும் ஆறுதல் அளித்தார்.

இஷாந்த் சர்மா ஓட்டங்களை வாரி கொடுத்தார். இந்த குறைகளை தீர்த்தால் மட்டும் வெற்றி பெற முடியும். நியூசிலாந்து முதல் 2 போட்டியிலும் வென்று உள்ளதால் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. (க)

## ஜெனிவாவில்...

இது தொடர்பில் அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும், போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இலங்கை அரசாங்கம், ஜெனிவாவுக்கு சென்று ஒன்றை கூறிவிட்டு, இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கையில் ஜனநாயகத்தின் ஆட்சியை ஏற்படுத்த உடனடியாக தேசிய கட்டமைப்பை செயற்படுத்த வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன் மேலும் இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் வன்செயல்கள் குறித்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஜெனிவா மாநாட்டில் வெளிப்படுத்தப்படும் எனவும் நிமல்கா தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின்நிலைப்பாட்டை பாதுகாத்துக் கொள்ள அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை மாநாட்டில், எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்க தயார் என மனித உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டிற்கு முன்னுரிமை வழங்கி எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது.

30 வருட கால யுத்தத்தை கடினமான முறையில் எதிர்கொண்டு வெற்றி கொண்டதனையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். அந்த சம்பவத்தை எவரும் மறந்து விடக்கூடாது.

நாட்டிற்கு எதிரான பிரச்சினையை தூண்ட எவராவது முயற்சிப்பார்களானால், அது மனித உரிமைகளை பாதுகாக்கும் செயலாக அமையாது. அதனை அரசியல்நோக்கை கொண்ட செயலாக கணிக்க வேண்டும் எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதனிடையே, இந்த முறை நடைபெறவுள்ள மாநாட்டில், அமைச்சர் மகிந்த சமரசிங்க பங்குகொள்வாரா? என வினவப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அது ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமையவே நடைபெறும் என தெரிவித்தார்.

இறுதி நேரத்தில் கூட தம்மை ஜெனிவா செல்லும்படி பணித்தாலும், அதற்கு அமைய தாம் செயல்படப் போவதாக தெரிவித்தார்.

அரசாங்கத்திற்காக தொழில்பட வேண்டிய கடப்பாடு தமக்கு உண்டென தெரிவித்த அமைச்சர் தனிப்பட்ட எந்த நோக்கத்தில் செயல்பட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## உணர்வு பூர்வமாக...

சிவாச்சாரியர்கள், இந்து மதத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


பிரார்த்தனைப் பவனி ஆரம்பமாகிய போது, சுமார் 50 ஆயிரம் பக்தர்களால் எழுதப்பட்ட இரண்டு கோடியே முப்பத்திரண்டு இலட்சம் ஓம் நமசிவாய எனும் பஞ்சாட்சர அர்ச்சனை நாமங்கள் பவனியில் இடம்பெற்ற மகா சிவலிங்கத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

தொடர்ந்து காங்கேசன்துறை வீதி வழியாக கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு பவனி புறப்பட்டபோது வீதியின் இருமருங்கிலும் மகரதோரணங்கள் கட்டப்பட்டு பூரணகும்பங்கள் வைக்கப்பட்டு பிரார்த்தனைப் பவனிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இவ் வரவேற்பு நிகழ்வில் பாடசாலைகளும் பங்கேற்றுக் கொண்டன.

பெருந்திரளான மக்களும் ஊர்திகளும் கலந்து கொண்ட ஓம் நமசிவாய பிரார்த்தனைப் பவனி கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்றன.

எமது மண்ணில் இந்து சமயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நடைபெற்ற பிரார்த்தனைப் பவனிக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கியமையும் பிரார்த்தனைப் பவனி மக்கள் மத்தியில் ஒரு பெரும் எழுச்சியினை ஏற்படுத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞ)

# மரண அறிவித்தல்



## அருட்கலாநிதி ஜெபமோகன் - ஜெபரட்ணம்

அருட்கலாநிதி ஜெபமோகன் - ஜெபரட்ணம் (பரி.மரியாள் தேவாலயம் கோப்பாய், இலங்கைத் திருச்சபை-அங்கிலிக்கன், சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்) நேற்று 24.01.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் சின்னத்தம்பி ஜெபரட்ணம்-ஜூலியட் இராஜமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுருநாதன்-இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சுனித்தாவின் (உப அதிபர்-உடுவில் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் சலோமியின் ( மாணவி-யா/ உடுவில் மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும் அருட்கலாநிதி ஜெபராஜா (அமெரிக்கா) , ஜெபநேசன் (செலான் வங்கி), ஜெபசாந்தி (குவைத்) ஆகியோரின் சகோதரரும் ஜெம், ரூபினி, தேவகுமார், சுஜாத்தா முரளி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உடுவில் மகளிர் கல்லூரியில் அமைந்த இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கோப்பாய் பரி.மரியாள் தேவாலயத்தில் ஞாயிறு (26.01.2014) காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அன்னாரின் இறுதி ஆராதனை 27/01/2014 (திங்கள்) மாலை 3.00 மணிக்கு நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கோப்பாயில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஜெபநேசன் (சகோதரர்)

(C-6326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரட்டலுக்கு உள்ளான...

செய்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வேலை முடிவில் வழக்கமாக இரவு வேளையில் ஊர்காவற்றுறையிலுள்ள தனது வீட்டிற்கு சென்று வருவதை இவர் வழக்கமாக கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் கடந்த இரு நாட்களிற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து காணாமல் போயுள்ளார்.

இவர் காணாமல் போவதற்கு முன்னதாக மேற்படி நபரின் தொலைபேசி இலக்கத்திற்கும் உறவினர்களின் தொலைபேசி இலக்கத்திற்கும் அருள்மதன் சுட்டுக் கொல்லப்படுவார் எனவும் அவர் கடத்தப்படுவார் எனவும் பல தடவைகள் இனந் தெரியாத நபர்களினால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இம்மிரட்டல்தொடர்பிலான முறைப்பாடும்ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டுநாட்களாககாணாமல் போன குடும்பஸ்தர் காணாமல்போனதாக கருதப்படுகின்ற கடைசி நாள் இரவு வேளை அவர் மதுபோதையில்இருந்ததாக அவரது நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

காணாமல்போன அருள்மதனை அவரது உறவினர்கள் தேடிவந்த நிலையில் கடற்றொழிலாளர்களினால் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டு உறவினர்களினால் இனங்காணப்பட்டது.

நேற்றுக்காலை சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டதோடு யாழ். நீதிமன்ற பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு கடலில் மிதந்த கொண்டிருந்த சடலத்தினை பார்வையிட்டார்.

சடலம் கரையிலிருந்து மேற்குப்புறமாக சுமார் ஒரு கிலோமீற்றர் தூரமுள்ள குருசுத்தீவுப் பகுதிக்கு அருகிலுள்ள ஆழமான கடற்பரப்பில் காணப்பட்டதனால் படகின் மூலமே பொலிஸாரும் பதில் நீதவானும் சென்று பார்வையிட்டிருந்தனர்.

பின்னர் சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பான விசாரணைகளினை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டு வருகின்றார். (செ-4)

# கிணற்றி...

தனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (செ-4,11)

# கயிற்றில் சிக்...

குறித்த சிறுமியின் கழுத்தில் இறுகியுள்ளது.

இதனை அவதானித்த பெற்றோர் குறித்த சிறுமியை உடனடியாக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை சிறுமி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வாகப்தீன் சடலத்தினை பிரேத பரிசோதனையின்பின்னர் பெற்றோரிடம்ஒப்படைக்குமாறு கிளிநொச்சி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதற்கமைய நேற்று மாலை சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (செ-11)

# குடும்பஸ்...

தேநீர் கடையொன்றில் பணியாற்றி வந்த நுவரெலியாவைச் சேர்ந்த குமாரசாமிவேலு (வயது - 52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த அச்சுவேலிப் பொலிஸார் மற்றும் மல்லாகம் பதில் நீதவான் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனை மறறும்மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (செ-9,24)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

மேலும் பல புதிய வருகைகள்
* இத்தாலி சட்ட ரீதியாகப் பறக்க சட்ட ஆலோசனை.
* பிரான்ஸ் சட்ட சம்மதமான நுழைவுக்கு சட்ட அறிவுரை
* சைப்பிரசில் படிக்க மாதம் 1 இலட்சம் வரை உழைக்க IELTS தேவையில்லை.
* நியூசிலாந்தில் படிக்கவே IELTS தேவையில்லை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com
(C-6325)

சல்லிக்கற்கள் விற்பனைக்குண்டு.
சரியான அளவை கொண்ட (3/4") கருங்கற்சல்லிக்கற்கள் குறைந்த விலையில் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.



3 கியூப் 33,500/-
(4 டிரக்டர் பெட்டி)
(C-6318)
0773818799
Branawan Enterprises
635, Pointpedro Road, Nallur, Jaffna

யாழ்ப்பாணத்தில்
WinSYS NETWORKS
High-Tech Computer Training & Consulting Centre!
CCNA | MCSA 2012 | CCTV & PABX | Fiber & Copper
Computer Training Programs
Diploma in Hardware & Neetworking
Diploma in Network Administration
MCSA 2012 & MCSE 2012
Cisco CCNA & CCNP



One Day Workshop on CCTV & PABX
CCTV Camera Installation
DVR Installation
PABX Intercom Installation
Structured Network Cabling
Wireless Router Configuration
JUST 2500/- with Lunch
4 Days Residential Training Camp
Copper Cabling by 3M Lanka
Copper Testing by Fluke Sri Lanka
Fiber Cabling by 3M Lanka
Fiber Testing by Fluke Sri Lanka
CCTV Camera Installation
DDNS Configuration
PABX Installation
Key Phone Configuration
Access Controll & Finger Print System, Security Alarm Syatem
GPS
Valuable Tool kit Provided
Food & Accomodation Provided, Certificate from 3M & WinSYS
HEAD OFFICE
NO 14, Schofield Place, Kollupitiya, Colombo 03
011-2589567
0777-259927
JAFFNA BRANCH
NO 77, Clock Tower RD, Jaffna.
0777-825789
(C-6320)
OTHER BRANCHES
KANDY - 0777-807630
BATTICALOA - 0777-832871
KURUNEGALA - 0777-047708
www.winsys.lk

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
எமது கற்றை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
Excellent Teacher's Panel & Individual Attention.
(C-6319)
Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Batch 1 : 25.01.2014
Batch 2 : 27.01.2014
Batch 3 : 01.02.2014
Batch 4 : 03.02.2014
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

கண் பரிசோதனை இலவசம்
T.P : 021 222 3461



THUSHA
OPTICAL AND DENTAL WORKS
"விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்"
இலகுவான முறையில் உங்கள் கண்களை கணனி மூலம் பரிசோதித்து அதற்குரிய மூக்குக் கண்ணாடிகளை குறுகிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
மாணவர்களுக்கு 10% விசேட கழிவுடன் கண்ணாடி வழங்கப்படும்.
துஷா
பல் மூக்குக் கண்ணாடியகம்
துஷா பல்மூக்குக் கண்ணாடியகம், 544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org